பக்கங்கள்: 17

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | சித்திரை 01 | வெள்ளிக்கிழமை | 14.04.2023 | கதிர் 155

# நிதிச் சுயாதீனம் இல்லாதமையே ஆணைக்குழுக்களின் பிரச்சினை

## சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்ரல் 14

சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நிதி சுயாதீனமின்மையே அடிப்படைப் பிரச்சினை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியின் நேர்காணல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு சுயாதீனத் தன்மை உள்ளதா என்பது விவாதத்துக்குரிய விடயமாகும். சுயாதீன ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் அரசியலமைப்பில் வரையறுக்கப்பட்டள்ளன.

தேர்தல்கள் ஆணைக்குழு மட்டுமல்ல, நாட்டில் உள்ள அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் நிதிச் சுயாதீனம் சம்பந்தமான பிரச்சினை காணப்படுகின்றது. இது தான் சுயாதீன செயற்பாடுகளின் அடிப்படையாக உள்ளது.

☞3



# எதிர்காலப் பயங்கரவாதிகளே இன்று புதிய சட்டமூலத்தை எதிர்க்கிறார்கள்

## ஐ.தே.க. பொதுச் செயலாளர் விதண்டாவாதம்

எதிர்காலத்தில் பயங்கரவாதச் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்கவுள்ளவர்களே தற்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்திற்குத் தொடர்ந்து எதிர்ப்புக்களை தொடர்ந்து வெளியிட்டு வருவ தாக ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் இந்த விடயம் சம்பந்தமாக மேலும் தெரிவித்ததாவது:

புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சடடமூலம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச்சட்டமூலத்திற்கு குறிப்பிட்ட ஒரு பிரிவினரே தொடர்ந்து எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றர். அவர்கள் தொடர்பில் எமக்குச் சந்தேகங்கள் உள்ளன.

எதிர்காலத்தில் பயங்கரவாதச்செயற்பாடுகளுக்கு அதரவளிக்கவுள்ளவர்களே எதிர்ப்பினை வெளியிடுகின்றார்கள் என்றே கொள்ள வேண்டியுள்ளது. பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்துகின்ற தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள் இந்தச் சட்டமூலத்தினைக் கண்டு அச்சமடைந்துள்ளனர்.

குழப்பத்துக்காகத் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பவர்கள் சிறைசெல்வதற்கு நேரிடும் என்பதற்காகவே தற்போது சட்டத்தினை எதிர்த்து கருத்துக்களைப் பதிவு செய்து வருகின்றார்கள்.

தற்போதைய நிலையில் குறித்த சட்டமூலம் சம்பந்தமாக நாடாளுமன்றத்தில் கருத்துக்களை எடுத்துரைக்க முடியும். நீதிமன்றத்தில் எடுத் துரைக்க முடியும். சட்டமூலத்தை எதிர்ப்பவர்கள் அதைத் தான் இப்போது செய்யவேண்டும் - என்றார்.

# சட்டத்தைத் திருத்தினால் ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்தலாம்

## மகிந்த தேசப் பிரிய தகவல்

நாடாளுமன்றத்தில் சட்டத் திருத்தத்தினைக் கொண்டுவந்தால் ஜனாதிபதித் தேர்தலை விரைவாக நடத்த முடியும் என்று தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

அவர் புதன்கிழமை செய்தியாளர்களைச் சநதித்தபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:



தற்போது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவது பற்றிய கருத்துக்கள் அதிகம் காணப்படுகின்றன. அவ்வாறு ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்துவதாக இருந்தால் 150இற்கும் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பினால் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியும். தற்போதைய நிலையில் நிச்சயமாக நாடாளுமன்றத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டுநிறைவேற்றப்பட வேண்டும்.

மக்கள் ஆணைபெற்ற

☞3

# இது ரகசியம் அல்ல!

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெரும் நரித் தந்திரசாலி ஜே.ஆர்.ஜெயவர்தனா. 1948 இல் சுதந்திர இலங்கையின் முதலாவது நிதி மந்திரி அவரே. ஆனால், முப்பது ஆண்டு காலம் கழித்துத்தான் அவரால் நாட்டின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியாக முடிந்தது.

கடந்த 45 ஆண்டு கால நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையில் அந்த அதிகாரத்தை மிகவலுவாகப்பிரயோகித்தவர் என்ற பெயர் 'கிழட்டு நரி' (Old Fox) என அழைக்கப்பட்ட ஜே.ஆரையே சாரும்.

அவரின் மருமகன் 'சிஷ்யன்' ரணில் விக்கிரமசிங்கதான் இப்போது ஜனாதிபதி. ஜே.ஆரினால் அரவணைத்துத் தூக்கி வளர்க்கப்பட்ட அவரது அரசியல் வாரிசும்கூட.

ஆனால், ஜே.ஆர். நிறைவேற்றதிகாரத்தை முழு அளவில் பிரயோகித்த போது, நாடாளுமன்றம் அவரது முழுக் கட்டுப்பாட்டில் இருந்தது. அப்போது நாடாளுமன்றில் இருந்த 168 எம்.பிக்களில் 140 பேர் அவ ரது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

☞2

## புத்தாண்டு வாழ்த்து

சித்திரைப் புத்தாண்டை இன்று கொண்டாடும் காலைக்கதிர் வாசகர்கள், விளம்பரதாரர்கள், வர்த்தகர்கள், அன்பர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். பிறக்கும் புத்தாண்டு அனைவருக்கும் சிறப்பையும் நன்மைகளையும் அள்ளித்தரவும் எமது வாழ்த்துக்கள்.

## இன்றும் நாளையும் இல்லை

சித்திரைப் புத்தாண்டு விடுமுறையை முன்னிட்டு இன்றும் நாளையும் காலைக்கதிர் பத்திரிகை வெளிவராது. இன்றைய மாலைப் பதிப்பும் நாளைய கலைப் பதிப்பும் தவிர்த்து நாளைய மலைப் பதிப்பு முதல் வழமைபோன்று காலைக்கதிர் வெளிவரும்.

# குரங்கு ஏற்றுமதி சாத்தியமில்லை

## சூழலியலாளர் கலாநிதி குணவர்த்தன தெரிவிப்பு

சர்வதேசபிரகடனங்களுக்குஅமைவாகவும், உள்நாட்டுச் சட்டங்களுக்கு அமைவாகவும் குரங்குகளை சீனாவுக்கு அனுப்பி வைக்க முடியாது என்று சூழலியலாளர் கலாநிதி ஜகத் குணவர்த்தன தெரிவித்தார்.

சீனாவுக்கு ஒரு இலட்சம் குரங்குகளை அனுப்புவது தொடர்பில் அமைச்சரவை உபகுழுவொன்றைநியமித்துஆலோசனைகளை முன்னெடுக்கவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளமை குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அழிவடையும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ள விலங்குகள் பட்டியல் என்கிற சர்வதேச பிரகடனத்தில் குரங்கும் உள்ளடங்குகின்றது. ஆகவே அந்தப் பிரகடனத்தை மீறி நாம் நடக்க முடியுமா என்பது தொடர்பில் கவனம் செலுத்தவேண்டும் மேலும் குறித்த பிரகடனத்துக்கு அமைவாக, வன உயிரிகள் மற்றும் தாவரங்கள் பாதுகாப்புக் கட்டளைகள் சட்டத்தின் கீழ் அனுமதி வழங்க வேண்டியுள்ளது.

☞3

# இலங்கைக்கு நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தொடர்ந்து கிட்டும்

## அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் தெரிவவிப்பு

நெருக்கடியான சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு தொடர்ச்சியாக தமது ஒத்துழைப்புகளை வழங்குவதாக சர்வதேசநாணயநிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி இணைந்து நடத்தும் ஸ்பிரிங் மாநாட்டின் பக்க நிகழ்வொன்றில் இலங்கை தூதுக்குழுவுடன்புதன்கிழமை நடத்திய கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். .

இந்தச்சந்திப்புதொடர்பில் சர்வதேசநாணயநிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா தமது டுவிட்டர் பக்கத்தில், "நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோருடனான சந்திப்புவெற்றிகரமாகநிறைவு பெற்றுள்ளது. பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அனைவரும் தமது பொறுப்புகளை உணர்ந்து செயற்படுவது அவசியமானது' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்தின் செயற்றிட்டங்களை முழுமைப்படுத்துவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதை சர்வதேச நாணய நிதியத்தின்

☞3

# கடன் மறுசீரமைப்புச் செயற்பாடுகளில் சீனாவையும் உள்ளீர்க்க ஜப்பான் விருப்பம்

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கான செயற்பாட்டில் சீனாவும் இணைந்து கொண்டால் சிறப்பாக இருக்கும் என்று ஜப்பானின் நிதியமைச்சர் சுனிச்சி சுசிக்கி தெரிவித்தார் என்று ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜப்பானின் நிதியமைச்சர் சுனிச்சி சுசிக்கியை மேற்கோள்காட்டி வெளியிடப்பட்டுள்ள குறித்த செய்தியில், இலங்கையின் கடன் மறுசீரப்பு பற்றி ஜப்பான், இந்தியா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்த அறிவிப்பை விடுக்கவுள்ளன.

மூன்று நாடுகளும் ஒருமித்துச் செயற்படுவதற்கான ஒருங்கிணைந்த தளமொன்றை முன்மொழிவதே திட்டமாக உள்ளது.

"இந்தச் செயற்பாட்டில் இலங்கைக்குகடன்வாங்கிய நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம். அந்த நடவடிக்கைகளுக்கு அமைவாக பல்வேறு கூட்டங்கள் முன்னெடுக்கப்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

அதனடிப்படையில் இணக்கப்பாடு எட்டும் நாடுகளுன் இணைந்து பொறி முறையொன்றை ஏற்படுத்துவதற்கு கடும் முயற்சிகளை மேற்கொண்டோம். பல நாடுகள் ஒன்றிணையுமென நாங்கள்எதிர்பார்க்கின்றோம். இந்தச்செயற்பாட்டில்சீனாவும் இணைந்துகொண்டால் சிறந்ததாக இருக்கும்.

இதேநேரம்,

☞3

## 15 அதிகாரிகளிடம் வாக்குமூலங்கள் பொலிஸால் பதிவு

இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபா பணம்காணாமல்போனமை தொடர்பில்நாணயபொறுப்பு சபையின் 15அதிகாரிகளிடம் கோட்டைபொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக உள்ளக விசாரணைகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மத்திய வங்கியும்

☞3

# புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட விடயத்தில் ரணில் நினைப்பதுபோல் விளையாட முடியாது

## இப்படி எச்சரிக்கிறார் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் வட்டக்கல

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர் நினைத்தது போன்று எம்முடன் விளையாட முடியாது என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் சட்டத்தரணிசுனில்வட்டக்கல தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை அவர் செய்தியாளர்களைச்சந்தித்து இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதியபயங்கரவாதஎதிர்ப்புச்சட்டமூலம் திருத்தப்படும் என்று ஆட்சியாளர்கள் குறிப்பிட்டாலும் தற்போது அதே சட்டமூலத்தினையே ஏப்ரல் 25 சபையில் சமர்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தச் செயற்பாட்டுக்கு ஆட்சியிலுள்ள முன்னாள் நீதி அமைச்சர் உள்ளிட்டவர்கள் எதிர்ப்பைவெளியிட்டுள்ளனர். அதேநேரம், சிவில் தரப்பினரின் பரிந்துரைகளும் உள்வாங்கப்படுவதாகத் தெரியவில்லை.

இவ்வாறான நிலைமையால் எரிந்த சாம்பலில் இருந்து மீண்டும் தீ ஏற்பட்டதைப் போன்ற சூழல் உருவாகியுள்ளது. இதற்கு தேசிய மக்கள் சக்தியாகய நாம் முழுமையான எதிர்ப்பினை தெரிவிக்கின்றோம்.

நீதிமன்றப் போராட்டத்தின் ஊடாகவோ, அல்லா் மக்கள் போராட்டத்தின் ஊடாகவோ இந்தச் சட்டமூலத்தினை தோல்வி அடையச் செய்வோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர் நினைத்தது போன்று எம்முடன் விளையாட முடியாது என்று அழுத்தமாகக் கூறிக்கொள்கின்றோம் - என்றார்.

# அரச பயங்கரவாதத்தை பலப்படுத்தும் சட்டத்தை எதிர்க்க ஒன்றிணைவோம்

## டலஸ் அழகப் பெரும கோரிக்கை

அரசபயங்கரவாதத்தைப் பலப்படுத்தும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தினை தோற்கடிப்பதற்கு எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டுமென சுதந்திரமக்கள்கூட்டணியின் தலைவர்டலஸ்அழகப்பெரும கோரிக்கை விடுத்துள்ளார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஏப்ரல் 25 நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது, அரச பயங்கரவாதத்தினை பலப்படுத்தும் சட்டமூலமாகும். அது அமுலானால் அரச பயங்கரரவாதமே நாட்டில் இருக்கும். ஆகவே, இந்தச் சட்டமூலத்தினை தோற்கடிக்க வேண்டியது மிகவும் முக்கிய மானது. இதற்காக அனைத்து எதிர்க் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும்.

அனைத்து எதிர்க்கட்சிகளும்அணிதிரண்டுஒருசக்தியாக எழுகின்றபோது இச்சட்டமூலத்தினை தோற்கடிக்கலாம். அதற்குநாம்தயாராகவே உள்ளோம். ஏனைய எதிர்க் கட்சிகளும் இந்த விடயத்தில்



கூடுதல் கவனம் எடுத்து பலமாக போதங்களின்றி ஒன்றிணைவது அவசியமாகும் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஜனாதிபதி வேட்பாளருக்கு பசில் ராஜபக்ஷ தகுதியானவர்

## மஹிந்தவுடன் ரணிலை ஒப்பிடுவது பொருத்தமற்றது என்கிறார் சாகர காரியவசம்

ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கு பொருத்தமான நபர்கள் இருக்கின்றார். பஷில் ராஜபக்ஷ கூட அதற்குத் தகுதியானவர்தான் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

அத்துடன், பயங்கரவாத போரை வெற்றிகொண்ட மஹிந்த ராஜபக்ஷவுடன் ரணிலை ஒப்பிடுவது பொருத்தமற்றது என்று குறிப்பிட்ட அவர், ரணில் மீது மரியாதை உள்ளதெனவும்கூறியுள்ளார்.

பத்தரமுல்லவில் உள்ள ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் தலைமையகத்தில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மஹிந்தராஜபக்ஷவுடன் ரணில் விக்கிரமசிங்கவை ஒப்பிடுவது பொருத்தமற்றது. அதில் திருப்தி கொள்ளவும் முடியாது. ரணில் விக்கிரமசிங்க மீது எமக்கு ஓரளவு மரியாதை உள்ளது.

நாட்டில் ஜனநாயகத்தினை ஒழித்து, பயங்கரவாதச் செயற்பாடுகள் மூலம் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லமுயன்றபோது அதற்கு முகங்கொடுக்க முடியாத நிலைமை எமது முன்னாள் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஏற்பட்டது.

இதனால்ரணில்விக்கிரமசிங்க பதவிக்கு வந்தார். அவர் திறமையான முறையில் நிலைமைகளைகையாண்டு கட்டுப்பாட்டைஏற்படுத்தினார். ரணில்விக்கிரமசிங்கமீதிருந்த நம்பிக்கையின் காரணமாகவே நாம் அவரை அதிகாரத்துக்கு கொண்டு வந்திருந்தோம். அதனை அவர் செயலிலும் காட்டியுள்ளார். அதற்குரியகௌரவும்உள்ளது.

அதற்காக மஹிந்த ராஜபக்ஷவுடன் அவரை ஒப்பிட முடியாது. அவர் இந்த நாட்டில் தசாப்தங்களாக நீடித்த பயங்கரவாதப்போரை முடிவுக்கு கொண்டு வந்த தலைவர். அவர் ஒருபோதும் நாட்டை பிளவு படுத்துவதற்காக செயற்பட்டவர் அல்லர்.

கேள்வி:- அமைச்சர் காஞ்சன விஜயசேகர அடுத்த ஜனாதிபதி வேட்பாளருக்கு பொருத்தமானவர் ரணில் விக்கிரமசிங்க என்று கூறியிருக்கின்ற நிலையில் பொது ஜன பெரமுனவுக்குள் இரண்டு நிலைப்பாடுகள் உள்ளனவா?

பதில்:- அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவின் பெயரையும் ஆராய முடியும் என்றுதான் அமைச்சர் காஞ்சன தெரிவித்திருந்தார். அதில் எந்தத் தவறும் இல்லை. அதற்காக எமது கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க என்று அர்த்தம் கொள்ள முடியாது. எமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருக்குரிய தகுதியுடைய தலைவர்கள் உள்ளனர். அவர்களிலிருந்தே ஒருவர் களமிறக்கப்படுவார். அதற்கு இன்னமும் காலம் உள்ளது.



கேள்வி:- உங்களது கட்சி ஜனாதிபதி வேட்பாளரைக்களமிறக்குவதற்கான நிலைமையக் கொண்டுள்ளதா? தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை விடவும் சிறந்த நபர் உங்களிடம் உள்ளார் என்று நம்புகின்றீர்களா?

பதில்: ஆம், எம்மிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உள்ளனர்.

கேள்வி:- நீங்கள் கூறுவது பஷில் ராஜபக் வையா?

பதில்:- என்னைப் பொறுத்தவரையில் பசில் ராஜபக்ஷ கூட ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்குவதற்குப் பொருத்தமானவர்தான். அவர் இந்த நாட்டுக்குத் தலைமைத்துவம் வழங்குவதற்கு தகுதியானவர் என்பதே எனது நிலைப்பாடாகும்.

கேள்வி:- பசில் ராஜபக்ஷவா அடுத்த ஜனாதிபதி வே ட்பாளர்?

பதில்:- அவ்வாறாகவும் இருக்கலாம். அதேநேரம் இன்னமும்ஒன்றரைவருடங்களின் பின்னர் தான் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. அதுபற்றி தற்போது சிந்திப்பது பயனற்றது. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பிலேயே தற்போது சிந்திக்க வேண்டும் - என்றார்.

# சோகங்களை தீர்க்கும் வருடமாக சோபகிருது வருடம் அமையட்டும்

## ஆறு.திருமுருகன் பிரார்த்தனை

அன்பர்கள் அனைவருக்கும் சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக. சோபகிருது வருடம் எங்கள் சோகங்களை தீர்க்கும் வருடமாக அமைய வேண்டும் என அனைவரும் பிரார்த்திப்போம்.

இவ்வாறு தனது புத்தாண்டு பிரார்த்தனை செய்தியில் தெரிவித்துள்ளார் துர்க்காதேவி தேவஸ்தானம் சிவபூமி அறக்கட்டளை ஆகியவற்றின் தலைவரும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவருமாகிய செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.

அவரது பிரார்த்தனை செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

புத்தாண்டு பிறக்கும் நேரத்தில் அனைத்து சைவ அன்பர்களும் திருக்கோவில்களுக்குச்சென்று குடும்பமாக பிரார்த்தனை செய்யுங்கள்.

வீட்டிலும் மூத்தோரை நாடி அனைவரும் வீழ்ந்து வணங்கி அவர்களின் பரிபூரணமான ஆசியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

உற்றார், உறவினர், நணபர்களின் வீடுகளுக்குச் சென்று அன்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள். உறவினர்களின் உறுதுணையை வளர்த்துக்கொள்ளுங்கள்.



எங்கள் குழந்தைகள் இயல்பாகவே எமது பண்பாட்டைக் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பை ஏற்படுத்துங்கள்.

புது வருடம் பிறக்கின்ற போது எம் உள்ளத்தில் புதிய சிந்தனைகளை தோற்றுவித்து அவை வெற்றி பெறுவதற்கு வழி செய்யுங்கள். கோபங்களை மறந்து அன்பைப் பெருக்கி அனைவரையும் ஆற்றுப்படுத்துங்கள். எங்கள் ஆதிச் சமயமாகியசைவசமயத்துக்கு வரும் இடையூறுகளைக் கண்டு அச்சப்படாதீர்கள். எங்கள் சமயம் என்றும் நிரந்தரமாக நிலைபெற்றுச் சிறக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே புத்தாண்டு நாளில் நாம் வணங்கும் தெய்வங்களை நன்றாக வேண்டுவோம். எங்களைச் சூழ்ந்துள்ள இடையூறுகள் அற்றுப்போகவேண்டுவோம். அனைத்து தமிழ் தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக செயற்பட பிரார்த்திப்போம். வைத்திய சாலைகளிலும் வீடுகளிலும் நோய்களால்பாதிக்கப்பட்டுள்ள அன்பர்கள் அனைவரும் நலம்பெற இறைவனை மன்றாடுவோம். இப்புதிய ஆண்டு எம்மண்ணில் நல்லவை நடைபெற மீண்டும் பிரார்த்தித்து அனைவருக்கும் நல்லாசிகள் கூறி அமைகிறேன் - என்றுள்ளது.

# நெஞ்சாரச் சித்திரையை வரவேற்று மகிழ்வோம்!

முன்பனி பின்பனி மாறிய பின்னே
இளவேனில் துளிர்க்க சித்திரை மலரும்
தைப் பொங்கலுண்டு தளர்வகலும் வேளை
புத்துணர் வூட்டச் சித்திரை கைகோர்க்கும்

பெற்றோரும் மகிழ்வர் பிள்ளைகளும் மகிழ்வர்
உற்றவரும் மகிழ்வர் உறவுகளும் மகிழ்வர்
மணமேடை அமர மங்கலநாள் அமைய
சிறப்பான நாளை சித்திரையே திறக்கும்

வருடத்தின் தொடக்கம் சித்திரையே என்போம்
சித்திரையே தொடக்கமாய் பஞ்சாங்கம் காட்டும்
பஞ்சாங்கம் பார்ப்போம் பலன்களையும் அறிவோம்
நெஞ்சாரச் சித்திரையை வரவேற்று மகிழ்வோம்

மருத்துநீர் வைப்போம் மகிழ்வாய் நீராடுவோம்
புத்தாடை உடுத்தி புத்துணர்வு பெறுவோம்
பெற்றவர்கள் பெரியவர்கள் ஆசியினைப் பெறுவோம்
கற்றுத்தந்த ஆசானை கண்டாசி வாங்கிடுவோம்

கோவிலுக்குச் செல்வோம் குறையகலப் பிரார்த்திப்போம்
வாழ்வெல்லாம் வளங்கொழிக்க மனமார வேண்டிடுவோம்
நாடெங்கும் நலஞ்சிறக்க நாம்வேண்டி வணங்கிடுவோம்
நல்லமனம் தருகவென நாமிறையைத் தொழுதிடுவோம்

உறவுகளைக் கண்டிடுவோம் உளமகிழச் சேர்ந்திடுவோம்
சுவையான பட்சணங்கள் பரிமாறி மகிந்திடுவோம்
இனிப்பான சுவையோடு எல்லாமே ஈந்திடுவோம்
எல்லோரும் சித்திரையைக் கொண்டாடி இன்புறுவோம்

செந்தமிழர் சிங்களவர் சித்திரையை வரவேற்பார்
சொந்தமெனச் சித்திரையைக் கொண்டாடி குதூகலிப்பார்
பாற்சோறு பலகாரம் பக்குவமாய் செய்திடுவார்
பட்டாசு மத்தாப்பு வெடித்துமே மகிழ்ந்திடுவார்

உவப்புடனே ஊஞ்லேறி உளமகிழ ஆடிடுவார்
உல்லாசம் பொங்கிவர ஊஞ்சலாடிப் பாடிடுவார்
இளையவரும் முதியவரும் இணைந்துமே இருந்திடுவார்
எல்லோரும் ஊஞ்சலாடி சித்திரையை இருத்திடுவார்

கொடியேற்றம் ஒருபக்கம் கோவில்களில் நடக்கும்
தேரோடும் திருவிழாவும் சிறப்பாக நடக்கும்
மதுரையில் கள்ளழகர் கால்வைப்பார் வைகையிலே
மீனாட்சி திருக்கோவில் திருவிழாவாய் ஜொலிக்கும்

இசையோடு இயலும் இங்கிதமாய் ஒலிக்கும்
இளைஞரொடு முதியவரும் இணைந்துமே ரசிப்பார்
களைகட்டும் கலைவிழா களிப்பளித்து நிற்கும்
காதலுடன் சித்திரையும் கைகோர்த்து சிரிக்கும்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண், ஆஸ்திரேலியா**

# அனைவரது இடர்களும் நீங்கட்டும்

## இந்துக் குருமார் ஒன்றியம் ஆசிச் செய்தி

புதிய வருடத்தில் அனைவரது இடர்களும் நீங்கவேண்டும் என்று புத்தாண்டு ஆசிச் செய்தி வழங்கியுள்ளார் இந்துக் குருமார் அமைப்பின் செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.

அவரது ஆசிச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒரு தமிழ் ஆண்டு என்பது வானியல் ரீதியாகவும் அறிவியல் ரீதியாகவும் அளவிடப்பட்ட காலத்தைக் கொண்டது. பூமி, சூரியனை ஒரு தடவை சுற்றிவர 365 நாட்கள், 6 மணி, 11 நிமிடம், 48 நொடிகள் ஆகின்றது. இதுவே தமிழ் வருடத்தினதும் கால அளவாகும்.

சூரிய மேச இராசியில் பிரவேசிக்கும்போது தொடங்கும் ஆண்டு, மீன இராசியிலிருந்து வெளியேறும்போது முடிவடைகின்றது. ஆகவே தமிழ் வருடத்தின் கால அளவு எப்போதும் சீரானதாகவே இருக்கிறது. இதன் அடிப்படையிலேயே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கும் நாள், நேரம் கணிக்கப்படுகிறது.

சோபகிருது எனும் மங்கல நாமத்துடன் புதிய வருடம் உதயமாகிறது. இவ்வருடம் எமது மக்களினதும் ஏனைய சமூகத்தினதும் அனைத்து இடர்களும் நீங்கவேண்டும். ஒவ்வொருவரினதும் சமூகத்தினதும் தனித்துவம், வழிபாட்டு சுதந்திரம், கருத்துச்சுதந்திரம், பண்பாட்டு விழுமியங்கள் மதித்து பேணப்படவேண்டும்.

இவ்வாறான நிலை பேணப்பட்டு அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சமான இன்ப வாழ்வும் வளர்ச்சியும் உயர்ச்சியும் பெற்று நிலைக்க வேண்டும் என அன்பே உருவான பரம்பொருளை வேண்டி பிரார்த்தனை



செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்கின்றோம் - என்றுள்ளது.

கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.
சிவஸ்ரீ. ச. சாந்தரூபக்குருக்கள்.
செயளாளர், இந்துக் குருமார் அமைப்பு.

# 'இலவச கண்புரை சிகிச்சை'

யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை (கட்ராக்) அறுவைச்சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ் போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாகக் கண்புரை சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான நோயாளர்களைத் தெரிவுசெய்யும் அடுத்த கண்பரிசோதனை முகாம் எதிர்வரும் நாளை சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. எனவே கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்துகொண்டு தங்கள் பெயர்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் அனைவரினதும் எம்.பி. பதவிகளை அவர்களே ராஜினாமாச் செய்யும் - திகதியிடப்படாத- பதவி விலகல் கடிதங்களை அவர்கள் அனைவரிடமிருந்தும்பெற்றுத் தமது பொக்கற்றில் அவற்றை வைத்துக் கொண்டுதான் நாடாளுமன்றத்தை ஆட்டிப் படைத்து, தமது அதிகார பிரயோக ஆட்டங்களை முன்னெடுத்தார் ஜே.ஆர்.

ஆனால், 'தாய் எட்டடி பாய்ந்தால் பிள்ளை பதினாறு அடி பாயும்' என்பதைப் போல நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையின் கீழ் அதிகாரத்தை உச்ச அளவில் பிரயோகிப்பதில் ஜே.ஆரை விஞ்சியவராக - குருவை மிஞ்சிய சிஷ்யனாக- இருக்கிறார் ரணிலார். நாடாளுமன்றத்தில் ஆறில் ஐந்து பெரும்பான்மையை வைத்துக் கொண்டு ஜே.ஆர். செய்த அதிகாரப்பிரயோகத்தை மிஞ்சியதாக, அதிகார ஆட்டம் போடுகின்றார் ரணில் - அதுவும் 225 எம்.பிக்களை கொண்ட நாடாளுமன்றத்தில் தமது கட்சியின் சார்பில் ஆக ஒரே ஓர் எம்.பியை வைத்துக் கொண்டு.

அரசமைப்புத் திருத்தத்தின் கீழ் சுயாதீனமாகத் தேர்தல் நடத்துவதற்கு சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை கூட, தமது நிறைவேற்றதிகாரம் மூலம் நரித் தந்திரமாகக் குப்பை கூடைக்குள் தூக்கிக் கடாசி விட்டு, தமது அதிகார மேலாதிக்கக் கைவரிசையைக் காட்டுகின்றார் நவீன அரசியல் தந்திர நரியார் ரணிலார்.

ஒரு கல்லில் பல மாங்காய்கள் விழுத்தும் ரணிலின் பிந்திய ஒரு திட்டம் பற்றிய தகவல் இன்று வாசகர்களுக்கு.

தமிழ்த்தேசியத்தரப்பைச் சேர்ந்த எம்.பி. ஒருவர் அண்மையில் ஜனாதிபதி ரணிலைச் சந்தித்தார். மனம் விட்டுப் பேசினார். உள்ளூராட்சித் தேர்தலை நடத்த விடாமல் தடுக்கும் தந்திரோபாயம் தொடர்பில் தமது விசனத்தை ஜனாதிபதியிடம் நேரடியாக தெரிவித்தார் அந்த எம்.பி.

''வடக்கு - கிழக்குத் தமிழ் மக்களுக்கு தேசிய ரீதியில் அரசிலும், முறையான பங்களிப்பு இல்லை. வடக்கு - கிழக்கு மாகாண நிர்வாகத்திலும் இப்போது இடமில்லை. தற்சமயம் உள்ளூராட்சி நிர்வாகத்திலும் அது மறுக்கப்பட்டு விட்டது. இந்தப்போக்கு தாம் தமது சொந்தநாட்டில் வசிக்கின்றோம் என்ற எண்ணத்தை அவர்களுக்குத் தராது. தேசிய நல்லிணக்கத்துக்குச் சாவு மணி அடிக்கும் வேலை இது" - என்று நொந்து கொண்டார் அந்த எம்.பி.

அதனை அப்படியே ஒப்புக் கொண்டாராம் ரணிலார். ஆட்சியிலும் நிர்வாகத்திலும் தமக்கு உரிய பங்களிப்புக்கும் ஈடுபாட்டுக்கும் வாய்ப்பு, வசதி, சந்தர்ப்பம் தாராளமாக உள்ளது என்ற மனநிலையை

(03ஆம் பக்கம் பார்க்க)




## இனி இது .....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி) சிறுபான்மையினரிடையே ஏற்படுத்துவது தேசிய நல்லிணத்துக்கு அவசியமானது என்பதை மனதார ஒப்புக்கொண்ட ஜனாதிபதி ரணில், அதற்காகத் தாம் ஒரு திட்டத்தைவைத்திருக்கின்றார் எனக் குறிப்பிட்டு அதை அந்த எம்.பியிடம் வெளிப்படுத்தினார்.

"உள்ளூராட்சித் தேர்தலைக் கட்டம் கட்டமாக நடத்துங்கள் என்று மஹிந்த தேசப்பிரிய கூட வலியுறுத்துகின்றார். (மஹிந்த தேசப்பிரிய முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர். இப்போது எல்லை நிர்ணய ஆணை குழுத் தலைவர்) உள்ளூராட்சித் தேர்தலை மட்டுமல்ல, மாகாண சபைத் தேர்தலையும் கூட சேர்த்து நடத்தலாம். வடக்கிலிருந்து அதை ஆரம்பிப்போம். முதலில் வடக்கில். அடுத்து கிழக்கில். பின்னர் அதை அடுத்த பகுதிகளில் என்று முன்னெடுக்கலாம். வடக்கில் மாகாணசபைத்தேர்தலையும் உள்ளூராட்சித்தேர்தலையும் ஒன்றாக 'ஒரே சமயத்தில்' வரும் டிசம்பருக்கு முன் நடத்தி முடிக்கலாம்." - என்று தமது திட்டத்தை விவரித்திருக்கின்றார் ரணில்.

அதற்குரிய சில சட்ட திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கருதும் ஜனாதிபதி, அதனைச் சுலபமாகசெய்துமுடிக்கலாம்என்றும் நம்புகின்றார்.

இந்தத்திட்டத்தின்கீழ்ஒரே கல்லில் பல மாங்காய்களை விழுத்தக்காய்நகர்த்துகின்றார் அவர். அவை யாவை?

ஒன்று -வடக்கு, கிழக்குத் தேர்தல்களில்தென்னிலங்கை கட்சிகளுக்கும்தரப்புகளுக்கும் பெரு வெற்றி வாய்ப்புக் கிட்டுவதில்லை. அந்தத் தேர்தல் முடிவுகள், ஜனாதிபதிரணிலைப் பொறுத்தவரை அவர் எதிர்பார்த்து காத்திருக்கும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தி விடா. ஆகவே அவற்றை நடத்த முயற்சிப்பதன் மூலம் 'தேர்தலுக்கு முகம் கொடுக்கப் பயந்தவர்' என்ற இழுக்கு தமக்கு நீடிக்காமல் தவிர்க்க முடியும் என்று அவர் நம்புகிறார்.

இரண்டு - வடக்கு, கிழக்கில் மாகாண சபை தேர்தல்களை நடத்துமாறு விடாது அழுத்தம் கொடுக்கும் புதுடில்லியையும் இந்த முயற்சி மூலம் தாஜா செய்-யலாம் என்று அவர் கருதுகிறார்.

மூன்று - இப்படிப் பகுதி பகுதியாக உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை தேர்தல்களை வடக்கு, கிழக்கிலாவது நடத்துவதன் மூலம் சிறுபான்மையினர் மத்தியில் இருக்கும் தமது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ளலாம் என்று அவர்கள் கருதுகின்றார்

நான்கு - இந்தத் திட்டத்தை ஐக்கிய மக்கள் சக்தி போன்ற பிரதான எதிர்க் கட்சிகள் எதிர்த்து, அந்த முயற்சியைத் தோற்கடித்தால், சிறுபான்மையினருக்கு அரசமைப்புச் சட்டப்படியான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்குத்தான் எடுத்த முயற்சிகளை சஜித்தின் கட்சி போன்றவை நாசமாக்கி விட்டன என்ற பிரசாரத்தை முன்னெடுத்து, அவற்றுக்கு எதிராகச் சிறுபான்மைத் தரப்புகளையும் புதுடில்லியையும் திருப்பி விடலாம் என்றும் அவர் கணக்கு போடுகின்றார்.

இப்படி நரி தந்திரங்கள் பல ரணிலின் புதிய திட்டத்தின் உள்ளே பொதிந்து கிடக்கின்றன.

தமிழ்க் கட்சிகள், தரப்புகள் உள்ளூராட்சி சபை தேர்தல்களுக்கும் மாகாண சபை தேர்தலுக்கும் புதிதாக வேட்பு மனுக்கள் தாக்கல் செய்து அவற்றை எதிர்கொள்வதற்காக இப்போதே தூக்கம் கலைந்து எழுவது நல்லது என நினைக்கிறேன்.

- இடி மின்னல் -

## நிதிச் சுயாதீனம்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு நிதி சம்பந்தமான சுயதீனம் காணப்படுமாக இருந்தல் அவற்றின் சுயதீனச் செயற்பாடுகளுக்கு பிரச்சினைகள் ஏற்படாது. தற்போது தேர்தலை நடத்தும் பணி தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் காணப்பட்டாலும், அதற்கான நிதியை ஆட்சியாளர்களே வழங்க வேண்டும்.

ஆகவே, தேர்தல்கள் ஆணைக்குழுதேர்தலுக்கான நிதி விடயத்தில் ஆட்சியாளர்களிடமே தங்கியுள்ளது. அந்த நிலைமைகளை மாற்றுவதாக இருந்தால் அமெரிக்காவலில் இருப் பது போன்று தேர்தல் நாட்காட்டியொன்றுநிரந்தரமாகபேணப்படவேண்டும். ஆனால் அதற்கான நிலைமைகளும் காணப்படவில்லை - என்றார்

## இலங்கைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினாஜோர்ஜீவாவிடம் மீள உறுதி செய்துள்ளதாக நிதி இராஜாங்கஅமைச்சர்ஹெறான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த சந்திப்பு தொடர்பில் டுவிட்டர் பதிவைச் செய்துள்ள அவர், ''கடன் நிலைத்தன்மையை உறுதி செய்தல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்திக் கொள்வதற்காக, சர்வ தேச நாணய நிதியத்தின் திட்டங்களை பூர்த்திசெய்ய இலங்கை அர்ப்பணிப்புடன் உள்ளதாக இதன்போது இலங்கையின் தூதுக்குழு மீள உறுதி செய்துள்ளது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டத்தைத் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனதிபதி ஆட்சிப்பீடத்தில் இருந்தால் அவ்விதமான அவசியமில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி பாராளுமன்றத்தினால்தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி. ஆகவே நிச்சயமாக நாடாளுமன்றத்தில் திருத்தம் அவசியமாகின்றது - என்றார்.

## குரங்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இவ்வாறு அனுமதி வழங்குவதாயின் எந்தவொரு விலங்கையும் வணிக நடவடிக்கைக்காக இலங்கையிலிருந்து கொண்டு செல்ல முடியாது. வெளியிடப் பாதுகாப்பு மற்றும் இட மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு உட்பட்டு வரையறைகளுக்கு அமைவாகபிறிதொருநாட்டின்மிருக காட்சி சாலைக்கு மட்டுமே மாற்ற முடியும் - என்றார்.

## கடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜி- 7 நாடுகளின் தலைமை பதவியை ஏற்றுள்ள ஜப்பான் இலங்கை போன்ற நடுத்தர வருமான நாடுகளின் கடன் நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. ஜி7 நாடுகளின் தலைவர்களின் சந்திப்பின் பின்னர் ஜப்பான் இந்தியா பிரான்ஸ் ஆகிய நாடுகள் புதிய தளம் குறித்து அறிவிக்கவுள்ளன'' என்று ஜப்பானிய அமைச்சரர் தெரிவித்துள்ளார் என அந்தச் செய்தி தெரிவித்துள்ளது.


## 15 அதிகாரி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேற்கொண்டுள்ளது.

இந்த 50 இலட்சம் ரூபாவினை யாராவது திருடினார்களா அவ்வாறு இல்லை எனின் நிதி கணக்கீட்டின் போது ஏதேனும் தவறு இடம் பெற்றுள்ளதா என்பது தொடர்பிலான பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தப் பணம் வைக்கப்பட்டிருந்த மத்திய வங்கியின் மூன்றாவது மாடியானது அதியுயர் பாதுகாப்பு கட்டமைப்புடன்அமைக்கப்பட்டிருந்தது. அவ்வாறான நிலையில் அதற்குள் பிரவேசித்தவர்கள் யார் என்பது தொடர்பில் காணொலி ஆதாரங்களைப் பெறுவதற்கும் பொலிஸாரால்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம் 076 443 8622






காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## துன்பங்கள் நீங்கி இன்ப ஒளி

இன்று சித்திரைப் புத்தாண்டு. தமிழ்ப் புத்தாண்டு என்று சொல்லப்பட்டாலும் இந்துக்களின் புத்தாண்டான இன்றைய நாளைக் கொண்டாடுகின்ற அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

பிறக்கின்ற இந்த ஆண்டு அனைவருக்கும் சிறப்பானதாக அமையவேண்டும். வாழ்வில் துன்பங்கள் நீங்கி இன்ப ஒளிபிறக்க வழிகாட்டுவதாக அமையவேண்டும் என்பதே எமது வேணவா. அது நடக்கும் என்றும் நம்புவோம்.

இலங்கை பிரிட்டிஷாரின் பிடியிலிருந்து விடுபடுவதற்கு முன்பிருந்தே தமிழர்கள் தம்மிடமிருந்து பறிக்கப்பட்ட இறைமையை மீட்டெடுப்பதற்குப் போராடி வருகின்றனர். கடந்த 75 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடரும் இந்தப் போராட்டத்தில் இன்னமும் ஒரு உருப்படியான அடைவை நாம் கண்டுகொள்ளவில்லை.

மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்று நாட்டின் அரைகுறை அதிகாரப் பகிர்வுகள், பரவலாக்கங்கள்கூட இல்லாமல் செய்யப்பட்ட படுமோசமான நிலையில் நின்றுகொண்டிருக்கின்றது தமிழ் இனம். அவநம்பிக்கையின் உச்சத்தில் இருக்கின்றது. அதிலும் இதுவரையில் மிதவாதியாக, மக்களாட்சிவாதியாகத் தமிழ் இனம் நம்பிய ஒருவரின் ஆட்சியில் இத்தகைய மிக மோசமான இடத்தைத் தமிழ் இனம் அடைந்திருப்பது மிகவும் வேதனைக்குரியது.

பௌத்த, சிங்கள மேலாதிக்கம் மிக மோசமான நிலையில் தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பை, அடக்குமுறையைப் பகிரங்கமாகவே நிகழ்த்தி வருகின்றது. அதிகார ஆசையினால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது வேடிக்கை பார்ப்பவர்களாகவே ஆட்சியாளர்கள் நின்றுகொண்டிருக்கின்றார்கள். பௌத்த, சிங்களக் குட்டையில் ஊறிய எல்லா மட்டைகளும் ஒன்றுதான் என்பதாக நிலமைகள் நகர்ந்துகொண்டிருக்கின்றன.

ஒருபுறம் பொருளாதார நெருக்கடி, வேலைவாய்ப்பின்மை என்பன தமிழ் இளைஞர்களை விட்டுத் துரத்த, மறுபுறம் சிங்கள பௌத்த மேலாதிக்கம் அவர்களை நசுக்கிவிடத் துடிக்க, எங்காவது ஓடித் தப்பினால் போதும் என்கிற நிலைக்குத் தமிழ் இளைஞர்கள் வந்துவிடுகிறார்கள். இதனால் ஈழத்தில் தமிழர்களின் நிலை இன்னும் இன்னும் மோசமாகிக்கொண்டே செல்கின்றது.

பிறந்திருக்கும் இந்த புத்தாண்டு இந்தத் துயரங்களை எல்லாம் தாண்டித் தமிழர்கள் இந்த நாட்டில் நிம்மதியாகவும், சுதந்திரமாகவும், கௌரவத்துடனும் வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்தும் என்று எதிர்பார்ப்போம்.

# நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதி அரச பஸ் சேவை நிறுத்தம்; மக்கள் அவதி

நுவரெலியாடிப்போவுக்கு சொந்தமான எச்.சி. - 9550 என்ற இலக்கத்தகடு கொண்ட இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் சேவையில் இயங்கி வந்தது.

ஆனால், தற்போது சுமார் இரண்டு வாரங்களுக்கு மேலாக இந்த பஸ் சேவையில் இல்லை.

இவ்வாறான செயற்பாடு அப்பகுதியில் தொடர்ந்து கொண்டே இருப்பதாகவும், இது தொடர்பாக நுவரெலியா இ.போ.ச டிப்போ முகாமையாளரிடம் கேட்டால், அவர் அசமந்தமான பதிலைக் கூறுவதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினரால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

அந்தப் பகுதியில் சுமார் 60 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் வசிக்கும் பிரதேசத்துக்கும், அவர்கள் செல்லும் பாடசாலைக்கும் இடையே 10 கிலோ மீற்றருக்கு அதிக இடைவெளி காணப்படுகிறது.

இந்நிலையில் அந்தப் பாடசாலைக்கு செல்லும் நேரத்தில் இந்த ஒரு பஸ் மாத்திரமே மாணவர்களின் போக்குவரத்துக்காக சேவையில் இருந்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் திடீரென பஸ் நிறுத்தப்பட்டமையால் பஸ்ஸுக்காக காத்திருக்கும் மாணவர்கள், இந்த பஸ் ஊடாகதாம் பெறும் போக்குவரத்துச் சேவையை இழந்து, ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இந்த பஸ் சேவை நிறுத்தம் தொடர்வதால் பெரும் சிரமங்கள் ஏற்படுகின்றன எனப் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

மேலும், பஸ்சேவை நிறுத்தப்பட்டுள்ளதால் பாடசாலைக்கு உரிய நேரத்துக்கு செல்லவோ, பாடசாலையிலிருந்து மீண்டும் உரிய நேரத்துக்கு வீடு திரும்பவோ முடியாத நிலையில் மாணவர்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

மாணவர்கள் மாத்திரமன்றி, காலை வேளைகளில் அந்தப்பிரதேசங்களிலிருந்து நுவரெலியா, நானுஓயா பிரதான நகரங்களுக்கு செல்கின்ற பொதுமக்கள், வயோதிபர்கள், நோயாளர்கள் உள்ளிட்ட பலதரப்பினரும் போக்குவரத்துக்கான பேருந்து வசதியின்றி பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இப்பேருந்து சேவை நிறுத்தம் தொடர்பாக நுவரெலியா இ.போ.ச முகாமையாளரை தொடர்புகொண்டு வினவியபோது,

என்.சி. 9550 இலக்கத்தகடு கொண்ட பேருந்தினை இயக்கி வந்த சாரதி தற்போது விடுமுறையில் சென்று, மீண்டும் தொழிலுக்கு வராத காரணத்தால் பேருந்து நிறுத்திவைக்கப்பட்டுள்ளது எனவும், சாரதி விடுமுறையை முடித்துவிட்டு தொழிலுக்கு வந்த பின்னர், மீண்டும் இந்த அரச பேருந்து இயக்கப்படும் என அசமந்தத்தனமான பதிலை கூறியுள்ளார்.

அத்துடன் நுவரெலியா - தலவாக்கலை ஏ7 வீதியூடாக ஏனைய பல போக்குவரத்து சேவைகள் இடம்பெறுகின்ற போதும், பாடசாலை மாணவர்களுக்கான பேருந்து சேவையை வழங்குவதில் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உரிய முறையில் செயற்படுவதில்லை.

குறிப்பாக, டயகாமத்தில் இருந்து நுவரெலியா செல்லும் அரச மற்றும் தனியார் பேருந்துகளை பயணத்துக்காக வீதியில் நின்று காத்திருக்கும் மாணவர்கள் நிறுத்த முயற்சிக்கும்போதும், அப்பேருந்துகள் மாணவர்களை ஏற்றாமல் சென்றுவிடுவதாக பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் தொடர்ச்சியாக குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

எனவே, இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு நுவரெலியா - தலவாக்கலை பிரதான வீதியில் பாடசாலை நேரங்களில் பேருந்து சேவையை நிறுத்தாமல், மாணவர்கள், பொது மக்கள் என அனைவரும் இலகுவாக போக்குவரத்தினை மேற்கொள்ளக்கூடிய வகையில் பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அங்குள்ள மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (04)

# தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இலங்கை செயற்படுகின்றதாம்

## வோஷிங்டனில் கொன் உறுதியளிப்பு

பொருளாதார நெருக்கடியின் போது இலங்கைக்கு ஆதரவளிக்க முன்வந்தமைக்காக சர்வதேச நாணய நித்தியத்திற்கு நிதி இராஜாங்க அமைச்சர் ஹெரான் சேமசிங்க நன்றி தெரிவித்துள்ளார்.

கடன் நிலைத்தன்மையை அடைவதற்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கும் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து அமுல்படுத்துவோம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவாவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்கான இலங்கையின் அர்ப் பணிப்பை அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்தியதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களுடனும் சர்வதேச பங்காளிகளின் ஆதரவுடனும் வளமான நாட்டைக்கட்டியெழுப்புவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# திருத்தப் பணிகள் இடம்பெறும் குமுதினி படகை பார்வையிட்டார் சிறிதரன் எம்.பி.





யாழ்ப்பாணம் வல்வெட் டித்துறை பகுதியில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் குமுதினி படகை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சென்று பார்வையிட்டுள்ளார்.

நெடுந்தீவுக்கான பயணிகள் போக்கு வரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக மாவிலித்துறையில் தரித்திருந்ததுடன் திருத்தப்பணி களுக்காக வல்வெட்டித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு நீண்ட காலமாக திருத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதாவது வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை படகு என்பன நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த நிலையில் குமுதினி படகு பழுதடைந்தடைந்ததையடுத்து வடதாரகை படகு மாத்திரமே சேவையில் ஈடுபட்டுவருகின்ற நிலையில் நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இன் நிலையில் திருத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் குமுதினி படகின் திருத் தப்பணிகளை நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், நெடுந்தீவைச் சேர்ந்த ஓய்வு நிலை அதிபர் வரதன், நெடுந்தீவைச் சேர்ந்த கட்சியின் செயற்பாட்டாளர்கள் சென்று பார்வையிட்டு அதன் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் இலங்கையில் தொடர்கின்றன

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

இலங்கையில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பல்வேறு அச்சுறுத்தல்களும் அடக்குமுறைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளவை வருமாறு -

குறிப்பாக தமிழ் ஊடகங்கள் பல்வேறு தரப்பினராலும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கு இதுவரையும் நீதி கிடைக்காமல் இருக்கின்றமை அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

இந்த நிலையில், சட்டரீதியாக அணுக வேண்டிய விடயங்களுக்கு ஊடகங்களுக்குள்ளே அத்துமீறி நுழைந்து ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான ஊடகத்தை அச்சுறுத்துவதும் வன்முறையில் ஈடுபடுவதும் மக்களின் குரலை நசுக்குவதற்கு சமனானது, இதை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

பல்வேறு நெருக்கடிக்குள் மக்களுக்காக தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வதே அறம் ஆகும்.

மக்களுக்கான பணியை முன்னெடுத்துவரும் ஊடகங்களுக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறோம் - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

SOORYA®

# இலங்கை இல்லங்களுக்கு டிஜிட்டல் பஞ்சாங்கத்தை கொண்டு வருகிறது சூர்யா

இலங்கையின் தனிச்சிறப்பான, நம்பிக்கை மிகுந்த மற்றும் பரிச்சயமான வீட்டுப்பாவனை வர்த்தக நாமமான 'சூர்யா' இனது தயாரிப்பாளரான சன் மெட்ச் கம்பனி, குடும்பங்களும் இளையோரும் மற்றும் முதியவர்களும் புத்தாண்டு சடங்குகள் மற்றும் சுபநேர காரியங்களை இலகுவாக மேற்கொள்வதற்கு உதவிட தனித்துவமான டிஜிட்டல் பஞ்சாங்கமொன்றை முதன்முறையாக அறிமுகம் செய்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும், புத்தாண்டைக் கொண்டாடுபவர்கள் குடும்ப சம்பிரதாயங்களை பார்வையிடுவதற்கும், மற்றும் புத்தாண்டை ஆரம்பிப்பதற்காக சுப நேரங்கள், சடங்குகள் மற்றும் மரபுகளைப் பின்பற்றுவதற்கும் பஞ்சாங்கத்தின் வெளியீட்டை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். பஞ்சாங்கம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதும், தேவைகளுக்காக தொடர்ச்சியாக அதனை மேற்கோள் பார்ப்பதும் சிக்கலான, அதிக நேரமெடுக்கும் ஒரு காரியமாகும். எனினும், இப்பொழுது, சூர்யா டிஜிட்டல் பஞ்சாங்கத்தை பரவலாக யாரும் அணுக முடிவதோடு முழுக் குடும்பத்தினரும் இலகுவாக பயன்படுத்த முடியும்.

கிட்டத்தட்ட 40 வருடங்களாக இலங்கையரின் வாழ்க்கையை வளமாக்க உதவிய சூர்யா, சூரியன் இராசிமாறும்நிகழ்வானதமிழ்சிங்களப்புத்தாண்டுக்கு சிறப்பு சேர்க்கும் முகமாக டிஜிட்டல் பஞ்சாங்கத்தை இலங்கையின் ஒவ்வொரு இல்லத்துக்கும் புத்தாக்கமான எளிய ஒரு முறையில் கொண்டு வருகிறது. இந்த டிஜிட்டல் பஞ்சாங்கமானது பாதுகாப்பான சூர்யா தீப்பெட்டி ஒன்றின் தொழிற்பாடுகளைப் போலவே மிகுந்த சௌகரியத்தை வழங்கி இல்லங்களுக்கு மிகப் பொருத்தமான ஒரு தீர்வாக அமைந்துள்ளது.

டிஜிட்டல் பஞ்சாங்கத்தை அணுகிட ஒருவர் எளிதாக தனது ஸ்மார்ட்போனைப் பயன்படுத்தி எந்தவொரு சூர்யா தீப்பெட்டியையும் ஸ்கேன் செய்வது போதுமானது. இதன்போது வாடிக்கையாளர்கள் சமூக வலைதளங்களான பேஸ்புக் மற்றும் இன்ஸ்டகிராமில் பஞ்சாங்கத்தை பார்வையிடுவதற்கான AR ஃபில்டரை பெற முடியும்.

டிஜிட்டல் பஞ்சாங்கமானது எட்டு (08) சுப நேரங்களைக் கொண்டிருப்பதோடு, இவற்றில் பழைய வருடத்தில் நீராடுதல், புது வருடப் பிறப்பு, புண்ணிய காலம், அடுப்பைப் பற்ற வைத்தல், கொடுக்கல் வாங்கல், ஆகாரம் அருந்துதல், எண்ணெய் தேய்த்தல் மற்றும் புது வருடத்தில் தொழிலுக்கு செல்லுதல் ஆகிய முக்கிய சடங்குகளுக்கான நேரங்கள் உள்ளடங்கும்.

சன் மெட்ச் நிறுவனத்தின் பணிப்பாளர் / பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி கௌரி ராஜன் குறிப்பிடும்போது, கிட்டத்தட்ட 40 வருடங்களாக நம்பிக்கைமிகு இல்ல வர்த்தக நாமமாகத் திகழும் சூர்யா இலங்கை பாவனையாளர்களின் காலத்துக்கேற்ற மாற்றங்களுக்கு ஈடு கொடுப்பதற்காக தொடர்ந்தும் புத்தாக்கங்களை உருவாக்கி வருகின்றது. புது வருடம் பிறக்கவுள்ள இந்நேரத்தில், எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் சௌபாக்கியமான புதிய மாற்றங்களுக்காக வாழ்த்துக்களை நாம் தெரிவிப்பதோடு, இம் மகிழ்ச்சியான கொண்டாட்டங்களோடு இணைந்த தனித்துவமான ஓர் அனுபவத்தை இந்த டிஜிட்டல் பஞ்சாங்கம் பெற்றுத் தரும் என தீர்க்கமாக நம்புகின்றோம் – என்று தெரிவித்தார்.

மெழுகு பூசப்பட்ட பாதுகாப்பான தீக்குச்சிகள் உட்பட பல்வேறு முன்னோடியான செயற்பாடுகளுக்கு அடையாளமாக சூர்யா திகழ்கிறது. டிஜிட்டல் பஞ்சாங்கத்தை அறிமுகம் செய்து காகிதப் பாவனையைக் குறைப்பதற்கு பங்களிப்பு செய்ததன் மூலமாக, நிலைபேறான வாழ்க்கை முறை மற்றும் சுற்றுச் சூழலைப் பேணிக்காத்தல்; மீதான தனது அவதானத்தைப் புதுப்பித்துள்ளது. நிறுவனம் தனது விநியோக செயன்முறையை முற்றிலும் தன்னியக்கமாக்கி இருப்பதோடு, இது மிகக்குறைந்த காகிதப் பாவனைக்கு அடையாளமாகும்.

இலங்கையின் சந்தையின் முன்னணி வர்த்தக நாமங்களில் ஒன்றாகவும் அதன் வெற்றியின் அடிப்படையிலும் பலதரப்பட்ட தனித்து உணரக்கூடிய உற்பத்தி வரிசையை சூர்யா வழங்குவதோடு, இதில் ஊதுபத்திகள், வாசனைக் குச்சிகள் மற்றும் சொட்டாத மெழுகுவர்த்திகள் என்பன உள்ளடங்கும். ஒரு மூலோபாய நகர்வாக அண்மையில் சூர்யா மதிப்புக்குரிய இலங்கை நடிகை யசோதரா விமலதர்ம அவர்களை தனது வர்த்தக நாமத் தூதுவராக நியமித்ததோடு, இதன் மூலமாக வர்த்தகநாமத்தின் தோற்றப்பாட்டை மேம்படுத்துவதற்கும், மேலும் அதிகமானோரை சென்றடையவும், மற்றும் கடந்த வருடங்களில் நிறுவனம் சம்பாதித்துள்ள நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் வலு சேர்ப்பதும் இதன் நோக்கமாகும்.



டிஜிட்டல் பஞ்சாங்கத்தை ஸ்கேன் செய்து அணுகக்கூடிய சூர்யா தீப்பெட்டியுடன் சூர்யாவின் வர்த்தகநாமத் தூதுவரான மதிப்புக்குரிய இலங்கை நடிகை யசோதரா விமலதர்ம

பஞ்சாங்கத்தை பார்வையிடுவதற்கான AR பில்டர் லிங்க்:

Facebook – http://bit.ly/3nCTDHs
Instagram – bit.ly/3JXHS5K



சூர்யா முதன் முறையாக அறிமுகம் செய்துள்ள டிஜிட்டல் பஞ்சாங்கத்தின் AR பில்டர். இப்பொழுது இன்ஸ்டகிராம் மற்றும் பேஸ்புக்கில் கிடைக்கிறது

NIPPON PAINT
THE COATINGS EXPERT

அனைவருக்கும் ஆரோக்கியம் மிக்க,
சௌபாக்கியமான, வண்ணமயமான

# சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு பண்டைய காலங்களிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்ட மரபுகள், வண்ணங்கள் மற்றும் பழக்க வழக்கங்களுடன் மீண்டும் கொண்டாடப்படும். NIPSEA, குழுமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் Nippon Paint Lanka, அனைத்து இலங்கையர்களுடன் இணைந்து இப் புத்தாண்டு கொண்டாட் டங்களுக்கு மேலும் வண்ணம் சேர்க்கிறது.

உங்கள் அனைவருக்கும் எமது இனிய சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு,
மற்றும் விடுமுறைக்கான நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

## வருடப்பிறப்பு சுப அனுஷ்டானங்கள்- 2023

கலியுகாதி சுத்ததினம் 1871583, நாடி 19 வினாடி 53 தற்பரை 45 க்கு சரியான சோபகிருது வருட சித்திரைமாதம் (14.04.2023) வெள்ளிக்கிழமை நாடி 19 வினாடி 54 (மணி 2.03) அபரபக்க நவமித்திதியில் திருவோண நட்சத்திரத்தில் இரண்டாம் பாதத்தில், சாத்திய நாமயோகத்தில், கரசக் கரணத்தில், கடக லக்கினத்தில், மீன நவாம்சத்தில், சுக்கிரகால வோரையில், செவ்வாய் சூக்கும வோரையில், சாத்திக குண வேளையில் நட்சத்திர பட்சியாகிய மயில் சாவுத் தொழிலும் சூக்கும பட்சி அரசு தொழிலும் செய்யும் காலத்தில் இப் புதிய சோபகிருது வருடம் பிறக்கின்றது

### விஷு புண்ணிய காலமாகும்

முற்பகல் நாடி 9 வினாடி 54 (மணி 10.03 முதல் அன்று பிற்பகல் நாடி 29 வினாடி 54 மணி 06.03 வரை விஷு புண்ணிய காலமாகும்

### விஷு புண்ணிய காலமாகும்

வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் வெள்ளை கரைய அமைந்த புதிய பட்டாடை ஆயினும் அணிய வேண்டும்

### தோஷ நட்சத்திரங்கள்

ரோகினி,மிருகசீரிஷம் 1ம் 4ம் கால்கள் திருவாதிரை புனர்பூசம் 1ம் 2ம் 3ம் கால்கள் அர்த்தம் உத்தராடம் 2ம் 4ம் கால்கள் திருவோணம் அவிட்டம் 1ம் 2ம் கால்கள்
இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்து இயன்ற தான தருமங்களை செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்யக் கடவர்

### ஸ்நான முறை

இப்புண்ணிய காலத்தில் யாவரும் விதிப்படி சங்கற்பித்து மருத்துநீர் தேய்த்து, சிரத்தில் கொன்றை இலையும் காலில் புங்கிலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்

### உண்டிகள்

அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல்லிக்கனி என்பவை சேர்த்து அருந்த வேண்டும்

### கைவிசேட நேரங்கள்

15.04.2023 காலை 07.52 -09.00 வரை (AM)
16.04.2023 காலை 7:49 -09.48 வரை (AM)

## ஆதாய விரய பலன்கள்

| இராசி | ஆதாயம் | விரயம் | பலன்கள் |
|---|---|---|---|
| மேடம் | 5 | 5 | சமசுகம் |
| இடபம் | 14 | 11 | சுகம் |
| மிதுனம் | 2 | 11 | பெருநஷ்டம் |
| கடகம் | 2 | 2 | சமசுகம் |
| சிம்மம் | 14 | 2 | அதிகலாபம் |
| கன்னி | 2 | 11 | பெருநட்டம் |
| துலாம் | 14 | 11 | சுகம் |
| விருச்சகம் | 5 | 5 | சமசுகம் |
| தனுசு | 8 | 11 | நட்டம் |
| மகரம் | 11 | 5 | லாபம் |
| கும்பம் | 11 | 5 | லாபம் |
| மீனம் | 8 | 11 | நட்டம் |

ஆதாரம் வாக்கிய பஞ்சாங்கம்

Asia Pacific No.1

NIPPON PAINT LANKA (PVT) LTD
No.69A, Buthgamuwa Road,Rajagiriya,Sri Lanka.
Telephone : +94 114 600400 Fax : +94 114 600409
www.nipponpaint.lk

NIPPON PAINT

SELLEYS
IF IT'S SELLEYS IT WORKS



இலங்கை மற்றும் இந்திய உணவுகளை குடும்பத்துடன் உண்டு மகிழ
சமுத்திரா மஹால் &
சைவஉணவகம்
எமது அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்
நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம்,
நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவை
யாழ்மண்ணில்
0094776529583
0212243536
கே.கே.எஸ் வீதி, மருதனார்மடம்,
சுன்னாகம்.


சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்கள்..!
தேசிய எரிவாயு ஏக விநியோகஸ்த்தர்
S.V. முருகேசு
LITRO GAS
துய்மையானதும் நீண்ட காலம் பாவிக்க கூடியதுமான இல்லத்தரசிகளின் ஒரே தெரிவு
S.V.M (PVT) LTD
122, Damstreet, Colombo-12.
SVMURUGESU
154, Hospital Road, Jaffna.
SVMURUGESU ( PVT) LTD
106, Hospital Road, Jaffna.
S.V.M. DISTRIBUTORS ( PVT) LTD
160, Standely Road, Jaffna.
SVM FUEL MART
173, 175, Palaly Road, Thirunelvely, Jaffna.
S.V.M. ENTERPRISE (PVT) LTD
288, A9 Road, Karadipokku, Killinochi.

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த கன்ரர் இரு கடைகளை மோதி உடைத்தது



## யாழ்ப்பாணத்தில் சம்பவம்



யாழ்ப்பாணம் ஆவரங்கால் பகுதியில் நேற்று (வியாழக்கிழமை) அதிகாலை வேகக்கட்டுப்பாட்டை இழந்த கன்டர் ரக வாகனம் இரண்டு கடைகளை மோதித் தள்ளியது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி அதிகாலை இறைச்சி கோழிகளை ஏற்றியவாறு பயணித்த வாகனத்தின் முன்பக்க ரயர் திடீரென காற்றுபோனதால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அருகே உள்ள ரயர் கடை மற்றும் தேங்காய் விற்பனை செய்யும் கடை ஆகியவற்றை மோதித்தள்ளி கன்டர்வாகனமும் முற்றாக சேதமடைந்தது.

இதன் போது குறித்த வாகனத்தில் பயணம் செய்த சாரதியின் உதவியாளர்கள் இருவர் கைகள் மற்றும் தலைகளில் காயங்களுக்குள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

உழவு இயந்திரம் ஒன்றின் உதவியுடன் கடையினுள் புகுந்த வாகனத்தை பிரதேசவாசிகள் மீட்டனர்.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பட்டாசு வெடிக்கும்போது அவதானம் மிகஅவசியம்

## மருத்துவர்கள் அறிவுறுத்து

பண்டிகைக் காலங்களில் பட்டாசு வெடிக்கும் போது ஏற்படும் விபத்துகள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு மருத்துவர்கள் பொதுமக்களிடம் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர்.

புத்தாண்டு காலப்பகுதியில் பட்டாசு வெடிப்பதால் ஏற்படும் விபத்துகள் அதிகரிக்கலாம் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சிறுவர்கள் பட்டாசு வெடித்தல் தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கும் போது பெற்றோர்கள் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் குமார விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.








Jaffna GLASS HOUSE
Dealers Window Glasses
Tempered Glasses
Sheet Glasses
Partition Fitting
Mirror, Plywood
Hardware Items
Aluminium Fitting
Specialist in Tempered Glasses & Glass Edging
No. 311, K.K.S. Road, Jaffna.
071 276 9189


P.K.R
Baby Choice & Tex
216, Main Street, Nelliyady
T.P. 077 833 0098


இனிய புதுவருட வாழ்த்துக்கள்
HIKVISION
MEGA STORE
No.1 WorldWide CCTV and Video surveillance
உங்கள் வீடுகள்,அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொது பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை, சிறந்த முறையில் காண்காணிப்பினை உறுதி செய்வதற்கு குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் பொருத்தி தரப்படும்
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரீ.வி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
+ 9475 886 0478
Main Show Room in Northern Province
hikvisionmegastore@gmail.com
இல.164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
NO:164, PALALI ROAD,THIRUNELVELY, JAFFNA. Tel :021 2227126


கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.
அ.கிருபாகரன் -அதிபர்-
குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
தவணைமுறைக் கட்டணங்கள்.
இரவிலும் வாகன பயிற்சிகள்.
NP L 2222
இனிய புதுவருட வாழ்த்துக்கள்
தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com
சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

# இலங்கை பெண்கள் ஓமானில் பாலியல் தொழிலுக்காக ஏலம்

## விசாரணைகளைத் தொடங்கியது ஐ.நா.



ஓமானில் இலங்கை பெண்கள்பாலியல்தொழிலாளர்களாக ஏலத்தில் விடப்பட்ட சம்பவம் தொடர்பாக ஐ.நா. விசாரணைகளைத்தொடங்கியுள்ளது.

அடிமைத்தனத்தின் தற்போதைய வடிவங்கள் தொடர்பிலான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமொயோ ஒபக்கட்டா மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இதுதொடர்பில்பெப்ரவரி ஏழாம் திகதி அவர் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்க விற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் 60நாள்களுக்குள்பதிலளிக்க வேண்டும் என்ற போதிலும் இதுவரை அரசாங்கம் பதிலளிக்கவில்லை.

ஜனாதிபதிக்கான குறிப்பிட்ட கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ள இரண்டு விசேட அறிக்கையாளர்களும் ஓமானிற்கு பாலியல் நோக்கத்துக்காக அல்லது தொழில் ரீதியான துஷ்பிரயோகத்துக்காககொண்டுசெல்லப்பட்ட பெண் கள் எதிர்நோக் கும் மனித உரிமை மீறல்கள் தொடர்பா கச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுற்றுலா விசாவில் ஓமானிற்கு சென்ற 90 பெண்கள் இலங்கை அரசாங்கத்தின் புகலிட இல்லம் உட்பட புகலிட இல்லங்களில் சிக்குண்டனர் எனத்தமக்குகிடைத்துள்ளதாக அவர்கள் அந்தக் கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பலபெண்கள்ஓமானிற்கு பாலியல் நோக்கத்துக்காக அல்லது தொழில்ரீதியான துஷ்பிரயோகத்துக்காக கடத்தப்பட்டுள்ளனர் எனத் தகவல்கள் கிடைக்கின்றன. ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில்வாய்ப்பு என்ற போர்வையிலேயே இவர்கள் கொண்டுசெல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐ.நாவின் அறிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில பெண்கள் ஏலத்தில் விடப்பட்டனர் தனியார் வீடுகளில் வைக்கப்பட்டு துஷ்பிரயோகங்களிற்கு உட்படுத்தப்பட்டனர். போதுமான உணவோ அல்லது உறங்குவதற்கான வசதிகளோ இருக்கவில்லைஎனவும்ஐ.நாவின்அறிக்கையாளர்கள்தெரிவித்துள்ளனர்.

# வர்த்தக நிலையங்களில் பால் மா பக்கெற்றுகளை திருடிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐவர் கைது!

பண்டிகைக் காலத்தில் பல்பொருள்விற்பனைநிலையங்களில் இருந்து அதிக பெறுமதியான பால்மா பக்கெற்றுகளை திருடிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், மகன் மற்றும் மருமகள் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் களுத்துறை குற்றப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் திருடப்பட்ட பொருள்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட ஓட்டொவின்உரிமையாளரும்அடங்குகிறார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நாள்களில் பல்பொருள் அங்காடிகளில் அதிக எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் காணப்படுவதால்சிறுகுழந்தைகளின் பைகள், தலைக்கவசங்கள் மற்றும்விசேடஉள்ளாடைகள் என்பன திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.















## நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட

# துருக்கிய மக்களுக்கு ஆடைகள் அன்பளிப்பு

அண்மையில் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் 4.6 தொன் ஆடைகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கானதுருக்கி தூதுவர் ரக்கிபே டெமெட் செகெர்சியோக்லுவிடம்வெளிவிவகார அமைச்சர்அலிசப்ரி குறித்த நன்கொடையை கையளித்துள்ளார். அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான உறவுகளைஎடுத்துரைத்த அமைச்சர், துருக்கி மக்களுடன் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் ஒற்றுமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் யசோஜா குணசேகர, துருக்கிய தூதரகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# 4 மாடிகளுக்கு மேல் கட்டடங்களை அமைக்க நுவரெலியா நகரில் தடை

## ஜனாதிபதி ரணில் உத்தரவு

கொழும்பு, ஏப். 14

நுவரெலியா நகரில் நான்கு மாடிகளுக்கு மேல் கட்டடங்களை நிர்மாணிப்பதைதடைசெய்யும்அமைச்சரவை பத்திரத்தை தயாரிக்குமாறு ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

உயரமானகட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதால் நகரத்தின்அழகுகெட்டுவிடும் என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அமைச்சரவை பத்திரத்தை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் அறிவித்துள்ளார்.

நுவரெலியாவில்பாரிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்படுவதால் நகரம் அழிந்துள்ளதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.






காலைக்கதிர் Kalaikkathir




## கசிப்பு கடத்தல்காரர்களிடம் இலஞ்சம்பெற்ற மின்னேரிய பொலிஸார் இருவர் கைதாகினர்!

பொலன்னறுவை கடவலவெள பிரதேசத்தில் காசிப்புக் கடத்தல்காரர் ஒருவரிடம் 9 ஆயிரம் ரூபாவை இலஞ்சம் பெற்றதாக கூறப்படும் மின்னேரிய பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் கைது செய்யப்பட்டனர் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கசிப்பு கடத்தல்காரர் என்று கூறப்படும் நபரிடம் தடையின்றி கடத்தலை தொடர மூன்று போத்தல்கள் மதுபானம் கோரப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும் தன்னிடம் மதுபானம் இல்லாததால், மூன்று போத்தல்களின் பெறுமதிக்கு பணம் தர முடியுமென கடத்தல்காரர், சந்தேக நபர்களான பொலிஸாரிடம் கூறினர் என ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்தார்.

இதற்கு இணக்கம் தெரிவித்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளும் குறித்த பணத்தை பெற்றுக் கொண்டபோது சுற்றிவளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர் என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## மருதானையில் கைப்பற்றப்பட்ட 15 ஆயிரம் கோழி முட்டைகள்

மருதானை பொதுச்சந்தையிலுள்ள கடையொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 15 ஆயிரம் கோழி முட்டைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

அதிகார சபை அதிகாரிகள் நடத்திய சோதனையில், குறித்த கடையில் முட்டைகளை பதுக்கி வைத்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு விற்பனையாளர்களால் முட்டைகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, அதிக விலைக்கு பொருள்களைக் கொள்வனவு செய்யாதிருக்குமாறும், அவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் அதிகார சபைக்கு அறிவிக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகாரசபை வேண்டுகோள் விடுத்துள்ளது.









# விரலுக்கு ஏற்ற வீக்கம்

## அக்கரை அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

இன்று தமிழ் புத்தாண்டு. தமிழரின் புத்தாண்டு. அரச அலுவல்களில் ஆங்கில நாள்காட்டியை பின்பற்றும் தமிழர்களுக்குத் தங்களுடைய அன்றாட வாழ்வில், இன்னமும் சித்திரை. வைகாசி, ஆனி, ஆடி என்று பழம் பெருமை பேசுவது இயற்கையாகவே வருகிறது. இது, உள்நாட்டுதமிழர்களை போலவே, புலம்பெயர்ந்தோருக்கும் பொருந்தும்.

அந்த விதத்தில், இலங்கை மற்றும் வெளிநாடுகளில் வாழும் தமிழ் மக்கள், தங்களது தாய்நாடு என்று பெருமைபடும் தமிழ் நாட்டு மக்களை விட இன்னமும் பழமை பேசுகிறார்கள். அதில், பெருமையும் அடைகிறார்கள்.

இந்த இரட்டை வாழ்கை அவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி, அவர்களுக்குள் முரண்பாடுகளை தோற்றுவித்ததா, என்பது ஆராய்ச்சி செய்யப் படவேண்டிய விடயம். மாறாக, இந்த ஒட்டுமொத்த முரண்பாடுகளே அவர்க ளின் வளர்ச்சிக்கு தடையாக இருந்து வந்திருக்கிறதா என்பதும் ஆலோசிக்கப்பட வேண்டிய விடயம்.

காரணம், இதுதான். உள்நாட்டில் சிங்களம் படிக்க மாட்டேன் என்று அடம் பிடிக்கும் தமிழ் இனம், மேலைநாடுகளில், அவர்களுடைய பல்வேறு மொழிகளில் புலைமைத்துவம் பெறும் அளவிற்குத் தேர்ச்சிபெற்றுள்ளனர். இதில், பலரும், ஆங்கிலம் அல்லது பிரெஞ்ச் என்ற ஒரு மொழி மட்டுமல்ல, நான்கு அல்லது ஐந்து மேலை நாட்டு மொழிகளில் சரளமாக பேசவும், படிக்கவும், எழுதவும் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இது போதாது என்று, உள் நாட்டில், சுய கௌரவம், இனத்தின் தனித்துவம் என்று மார்தட்டி, இறப்பைத் தழுவ தயாராயிருக்கும் இந்த மக்கள், மேலை நாடுகளில், அகதிகளாகச் சென்றடையவும் என்னவெல்லாம் செய்ய தயாராயிருக்கிறார்கள் என்று நினைத்துப் பார்க்கும்போது, வேதனையே மிஞ்சுகிறது. ஓட்டை உடைசலான படகுகள் என்று மட்டுமல்ல, தாங்கள் சென்றடையவேண்டும் என்று கணக்கிட்டு செயல்படும் நாடுகளில்கூட. அந்த நாட்டடின் அகதி வாழ்க்கைக்கும், அங்குள்ள அதிகார – நீதிமன்ற செயல்பாடுகளுக்கும், தங்களை உள்படுத்திக் கொள்வதற்கு சிறிதுகூடத் தயக்கம் இல்லாதவர்கள்.

### பின்னோக்கி. பார்க்க...

இவை எல்லாம், இனப்போர் மற்றும் சிங்கள பேரினவாதத்தின் இன அழிப்புக் கொள்கைகளின் விளைவு என்று தற்போது கூறுபவர்கள், பின்னோக்கிப் பார்க்கவேண்டும். கடந்த ஐம்பதுகளில், சிங்களம் மட்டும என்ற சட்டம் உருவாகிய பின்னர் தலைநகர் கொழும்பின் காலி முகத்திடலில், சிங்கள பேரினவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளான தலைமுறையே இந்த மேலைநாட்டுக்கான படையெடுப்பைத் தொடக்ககி வைத்தது.

முந்தைய ஆங்கிலேய அரசு முன்வைத்த சோல்பரி யாப்பையும், அதனை நடைமுறைபடுத்தாத சிங்கள அரசியல் தலைமைகளை குறை சொல்லிய அந்த தலைமுறை தமிழ் இளைஞர்கள், தங்களது எதிர்காலத்திற்கு இங்கிலாந்து அரசே உத்திரவாதம் அளிக்க வேண்டும் என்ற வகையில் கதைத்து, தங்களது எதிர்காலத்தை சிறப்பாக்கி கொண்டார்கள்.

அன்று தொடங்கி இன்று வரை, அடுத்தடுத்த தலைமுறையினர் தங்களையும் தங்களது குடும்பத்தவர்களையும் மட்டுமே, இவ்வாறோ, எவ்வாறோ, மேலை நாடுகளுக்கு அழைத்து சென்று, அங்கு குடியுரிமையும் பெற்றுக்கொண்டுள்ளனர். அவர்கள் அழைத்து சென்றவர்களில், ஏழை பாழைகள் யாராவது இருந்தார்களா? இல்லையே.

அவர்கள் அத்துடன் விட்டுவிடவில்லை. தங்களது மேலைநாட்டு சொகுசிலும் பாதுகாப்பிலும் இருந்து கொண்டே, இங்கிருந்தவர்களுக்கு கொம்பு சீவி விட்டுக்கொண்டிருந்தார்கள். தங்களது மனச்சாட்சிக்கு விலையாக, இங்குள்ள போராளிக் குழுக்களுக்குப் பண உதவியில் தொடங்கி, பின்னர் ஆயுத உதவி மற்றும் ஆயுதப் பயிற்சி ஆகியவற்றிற்கு வழி செய்தனர்.

இதனையே, விடுதலை புலிகள் அமைப்பு, தங்களது எதேச்சாதிகார காலகட்டத்தில், வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடையே வரி வசூலிக்கும் அளவிற்கு நிறுவனப்படுத்திக் கொண்டது. இதுவா, உரிமைக்கான போராட்டம்?

### வேதனையுடன் வரவேற்பு

இந்த பின்னணியில், ஏப்ரல் 16 தமிழ்ப்பகுதிகளில், ஏழுதமிழ்கட்சியினர் முன்னெடுப்பில் ஒரு நாள் உண்ணா விரத போராட்டம் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது, வேதனைக்குரிய ஆனால், வரவேற்கப்பட வேண்டிய விடயம். வேதனை, இனப்போர் முடிந்து, இன்றளவும் தமிழர் தங்களது கலாச்சார அடையாளங்களை இழந்து வருவது குறித்தது. வரவேற்பு, இப்போதாவது, இந்த ஒரு விடயத்திலாவது, பல்வேறு தமிழ்த் தலைமைகள் ஒரு சேர போராடுகிறோம, என்ற அறிவித்துள்ளமை குறித்தது.

தமிழரின் உரிமைகளுக்காகப் போராடத் தொடங்கி, இன்று, தங்களது கலாச்சார அடையாளங்களை பாதுகாத்துக் கொள்ளக்கூட தமிழ் இனம் போராட வேண்டி உள்ளது, என்பதை எண்ணி நோக்கும் போது, ஏன், இது குறித்து, முன்னரே, தமிழர் தலைமைகள் கூடிப் பேசவில்லை, என்ற கேள்வி எழுகிறது. என்றாலும், இன்று தொடங் கிப், போராட்டம் அரங்கேறும் வரையிலாவது இந்த ஒற்றுமை தொடருமானால், அதுவே, போராட்டத்திற்குக் கிடைத்த முதல் வெற்றி.

ஆனால், பத்திரிகை செய்திகளை வைத்து பார்க்கும்போது, மக்கள் சார்ந்த தமிழர் போராட்டங்களுக்கு அதிக அளவில் பங்கெடுப்பு இல்லை, என்ற உண்மை தெரியவருகிறது. இதுவே, மக்களுக்கும் தமிழ் தலைமைகளுக்கும் இடையே தோன்றியுள்ள இடைவெளியை வெளிப்படுத்துகிறது. அதிகப்படுத்துகிறது.

### உரிமையும் உணர்வும்

இதில் வருத்தப்பட வேண்டிய விடயம் என்னவென்றால், உரிமைக்கு போராடும்போது, உயிர் தியாகம் செய்ய தயாராயிருந்த தலைமுறைகள், தற்போது உணர்வுக்காக போராட வேண்டும் என்று கூறும்போது, வீட்டிலேயே இருந்து விடுகிறார்கள் என்ற செய்தி. அதனால் தானோ என்னவோ, தற்போதைய உண்ணா நோன்பு போராட்டத்திற்கு, ஞாயிற்று கிழமையை தேர்ந்;தெடுத்திருக்கிறார்கள்.

அதாவது, அலுவலகங்கள், பள்ளி மற்றும் கல்லூரிகள் விடுமுறை என்ற காரணத்தினாலாவது, போராட்டத்திற்கு அதிக அளவில் மக்கள் வரமாட்டார்களா, என்றநப்பாசையில், இவ்வாறு போராட்டத் திகதி முடிவு செய்யப்பட்டுள்ளது என்று எண்ணுவதற்கு இடமுள்ளது. தமிழ் மக்களின் மனநிலை மற்றும் தமிழ் தலைமைகளின் ஒற்றுமையின்மை ஆகியவற்றை கணித்தே, அரசும் தமிழர் தரப்பின் கோரிக்கைகளையும் ஆதங்கத்தையும் கண்டுகொள்ளாமலே காலம் கடத்துகிறது.

இப்படியே தமிழர் அரசியலை கண்டுகொள்ளாமலே இருந்தால், அந்த இனத்தின் அடையாளங்களை அழித்துவிட்டால், எதிர்வரும் காலங்களில், தமிழ் இனம் என்று தங்களை கூறிக்கொள்ளும் அளவிற்கு நாட்டில் யாருமே இருக்க மாட்டார்கள், என்று சிங்கள பேரினவாதிகள் கருதுகிறார்கள் போலும்.

சரித்திர ரீதியாக, இந்த நாட்டின் ஆதி குடிமக்கள் என்று அறியப்படும் வேடர் அல்லது சிங்களத்தில் கூறுவது போல் வேத்தா இன மக்கள் இப்போது எங்கே இருக்கிறார்கள்? எத்தனை பேர் இருக்கிறார்கள்?

### பேரினவாதிகளுக்கு நன்றி

சரித்திரம் என்ன? அண்மைக் காலத்திலேயே, மலையகத் தமிழர்கள் தங்களது அடையாளத்தையும் தனித்துவத்தையும் கொஞ்சம் கொஞ்சமாகத் தொலைத்து வருகிறார்களே. அதே நிலைமைதான், எதிர்காலத்தில், இலங்கை தமிழ் இனத்திற்கும் ஏற்படும்.

இதனை எல்லாம் செய்வதற்கு, சிங்கள பேரினவாதிகள், இந்து கோவில்களையும், அங்குள்ள விக்கிரகங்களையும் அழிக்க வேண்டும் என்றில்லை. அவர்கள் சும்மா இருந்தாலேபோதும், தமிழ் அரசியல் தலைமைகள், சங்கை ஊதிக் கெடுத்துக் கொள்வார்கள்.

இந்த உண்மை பேரினவாதிகளுக்கு தெரியாததால், அவர்கள் முட்டாள் தனமாக, வெறித்தனமாக, இந்துக் கோவில்களை தாக்கி அழிக்கப்போக, அதுவே, தமிழர்களை இணைத்து விடுமோ என்ற எண்ணவோட்டத்தை மீண்டும் ஒரு முறை விதைத்துள்ளது.

இதற்கு, தமிழ் இனம், சிங்கள பேரினவாதிகளுக்கே நன்றி சொல்லவேண்டும். அதைவிட முக்கியமாக, நாடு தழுவிய உள்ளாட்சி தேர்தல்களை ஒத்தி வைத்த ஜனாதிவதி ரணில் விக்கிரமசிங்கேவின் குயுக்திக்கு நன்றி சொல்ல வேண்டும். உள்ளாட்சித் தேர்தல் நடந்திருக்குமேயானால், தமிழ் அரசியல் கட்சிகளிடையே குடுமிப்பிடி சண்டையே தொடாந்திருக்கும்.

### உள்வீட்டு பூசல்கள்

முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு, இனப்பிரச்சனை என்பது, இந்து மதம் சார்ந்த பிரச்சனையாக உருமாற்றம் காணத் தொடங்கி உள்ளது. இதற்கான காரண காரியங்கள் குறித்து ஆராயத் தேவையில்லை. ஆனால், இந்தப் போராட்டத்தை முன்னிறுத்தி, இனப்பிரச்சனைக்கு மதச் சாயம் பூசுவதற்கு, சமூகத் தலைமைகள் எந்தச் சக்திக்கும் இடம் கொடுத்துவிடக்கூடாது. எதிர்வரும் உணவுதவிர்ப்புப் போராட்டம், இனப்பிரச்சினையில் மதசார்ப்பின்மைக்கு விடுக்கப்பட்ட சவால்கூட.

இதனைப் போராட்ட தலைமைகள் எவ்வாறு எதிர்கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே, இனப்பிரச்சினையில் தொடரும் ஒற்றுமை குறித்த ஒரு தெளிவு பிறக்கும். அல்லது ஒரு புதிய அத்தியாயம் தொடங்கும்.

முன்பு, இனப்பிரச்சினையில், கேட்பார்பேச்சு கேட்டு, விடுதலை புலிகள் அமைப்பின் தலைமை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்லிம் இனத்தவரை, அன்னியப்படுத்தியது. அண்மைக்காலத்தில், தமிழர்களிடையே, இந்து, கிறிஸ்தவர் என்ற வேறுபாடுகள் வெளிகொணரப்படுகின்றன.

இப்போதே, இந்துக் கோவில்கள் இடிப்பு விவகாரத்தில், குறிப்பாக இந்தியாவின் துணையை நாடவேண்டும் என்று விக்னேஸ்வரன் போன்ற தமிழ் அரசியல்வாதிகளும், பிற மதவாதிகளும் பொது வெளியில் பேசத் தொடங்கி உள்ளனர். அது போன்றே, மேலை நாடுகளின் உதவியையும் பெற முயற்சி செய்யவேண்டும் என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆனால், இது வரை மேலை நாடுகள் செய்தது என்ன? தங்களது பூகோள அரசியலுக்கு இலங்கை அரசை பயன்படுத்தும் விதத்தில் மட்டுமே அமெரிக்கா போன்ற மேலை நாடுகள் செயல்பட்டு வருகின்றன. அதனால் நிலவும் அமெரிக்கா – சீனா போட்டியில், முன்னவர்கள் வெற்றி பெற்றுவிட்டால், பின்னர், தமிழர்களாவது, இனப்பிரச்சனையாவது...

அதாவது, கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைகுண்டம் போக வேண்டும் என்ற தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். மாறக, தனது, விரலுக்கு ஏற்ற வீக்கமாக, மீண்டும் தமிழர் அரசியல் தலைமைகளிடையே ஒற்றுமையை முன்னிறுத்துவதற்கு மட்டுமே முன்னுரிமை அளிக்கவேண்டும்.

காலைக்கதிர்
Kalaikkathir

உ
முருகன் துணை.

## நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# நட்பியல்

உலகத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஒன்றுடன்ஒன்று பிணைந்து ஒற்றுமையாக வாழ்வதற்க்கு மிகவும் அவசியமான காரணியாக விளங்குவது நட்பு என்ற நட்பண்பு ஆகும். ஓர் உயிர் வாழ்வதற்க்கு நீர், வளி, உணவு, உறையுள் பாதுகாப்பான தங்குமிடம் போன்ற எந்த அளவிற்க்கு அவசியமோ அதைப்போல் நட்புஎன்னும்பண்பும்மிகவும் அவசியமான காரனியாக விளங்குகின்றது. ஏனெனில் ஒவ்வொரு உயிரினமும் ஒன்றையொன்று பகைத்துக் கொண்டால் உலகில் உள்ள உயிர்கள் அனைத்தும் அடிபட்டு இறந்து உலகே சுடுகாடாக மாறிவிடும் இதனால் தான் வள்ளுவப் பெருமான் நட்பின் பெருமையை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

உலகில் வாழ்வதற்காக பிறந்த நாம் நன்றாக நன்றாக வாழ வேண்டுமானால் அதற்கு பல்வேறு காரணிகள் உதவுகின்றன. நாம்வாழ்வதற்குபல்தரப்பட்ட உயிர்களில் தங்கி வாழ வேண்டிய நிலை உள்ளது. மற்றையவர்களின் உதவி இல்லாமல் நம்மால் எந்த ஒரு காரியத்தை செய்யமுடியாது. நாம் அடுத்தவரின் உதவியைப்பெறவேண்டுமேயானால்அவர்களிடத்துநட்புக் கொள்ள வேண்டும். நல்ல நண்பன்நம்முடன்இருந்தால் இந்தஉலகத்தையேநம்மால் வென்றுவிடமுடியும்.இதனை

'கோட்டுப்பூ மலர்ந்த பின்
கூம்பாது'

எனநட்பின்பெருமையை நாலடியார்உணர்த்துகின்றது. ஓர் நண்பன் நமக்கென இல்லையென்றால் நாம் நன்றாக கூன், குறுடு, செவிடு இன்றிப்பிறந்தும்பயனில்லை.

நாடு, இனம், மதம், சாதி, மொழி எனப் பலவகைப்பட்ட வகைப்பாடுகள் மூலம் நாம் பிரிந்து காணப்படினும் நட்பு என்ற ஒரு விசயமே நம்மை ஒன்று சேர்கின்றது. இப்பொழுதுநாம்ஒருவேலை தொடர்பாக வெளியிடத்திற்கு சென்றோமானால் அங்கு நமக்குத் தெரியாத நபர்களே கணப்படுகின்ற போதுஅவர்களுடன் நட்புடன் பழகினால் நம் வேலையை இலகுவாக்கித் தருவார்கள். இவ்வாறு பல் தரப்பட்ட மனிதர்களுடன் நாம் சகஜமாக பழக நல்வழியிடுவது நட்பாகும்.

உன்பொருள்என்பொருள்
என்றுநட்பில்ஒன்றில்லையே
ஆண் என பெண் என பேதம்
என்றுநட்பில்ஒன்றில்லையே
பூவாசம் சேர்திருவோம்

என குறிப்பிடுவதன் மூலம் நட்பின் தன்மை வெளிப்படுகின்றது. இவ்வாறு பல வகையான நட்பின் தன்மை வெளிபடுகின்றுது. இவ்வாறு பல வகையான நட்பின் பெருமையை மிக அழகாக வள்ளுவர் எடுத்துரைகின்றார்.

நட்பும் இல்லற வாழ்கையும் ஒன்றே. கணவன் மனைவி அமை வது முன் ஜென்மபயனாகும். கணவன், மனைவிக்கிடையில் நட்புறவு இல்லாவிட்டால் எவ்வாறு பிரச்சினைகள் தோன்றி நம்மை தீமைக்குள் உள்ளாகுமோ அதைப் போல நான் நல்ல நண்பன் அமையாவிட்டால் பல பிரச்சினைகளைஎதிர்நோக்கி அழிவுப் பாதைக்குள் செல்ல வேண்டி ஏற்படும் இதனை

யாவும் ஞாயும்.....

எனும் குநற்தொகைப் பாடல் மூலம் கணவன் மனைவி எவ்வாறு சேர்ந்து வாழ்கின்றார்கள் என்பதை உணர்த்தி நிர்கின்றது. இதைப்போலேதான் நட்பும் இருவரில் ஒருவர் பொறுமையுடன் இருப்பது அவசியம்ஒருவருக்குஒருவர் பொறுமையுடன் இருப்பது அவசியம்ஒருவருக்குஒருவர் விட்டு கொடுப்பதும் மிகவும் நன்று.

இதயம் எனும் இரு கூறுகள் சேர்ந்து உருவமில்லாத ஓர் சிசுவை சுமப்பது அதற்க்கு வயதில்லை உருவம் என்ற நிலை இல்லை இவ்வாறு தோன்றுவதால் தான் நட்பு. நட்பு நேரில் கண்டு பழகி கதைத்துப் பேசி மகிழ்வதால் வருவது மாத்திரம் நட்பல்ல. நட்பு எனும் உணர்ச்சியால் இணைவது நட்பாகும். உதாரணமாக கோப்பெருஞ்சோழன் பிசிந்தியாருக்கிடையில் ஏற்பட்ட உறவை எடுத்துக்காட்டமுடியும். இருவரும் நேருக்கு நேராக அல்லது ஓலை கூட பேசமல் நட்பால் உணர்ந்து ஒருவர் உயிர் நீக்க இன்னொருவருவரும் உயிர் நீத்தார். இதன் மூலம் அவர்களின்நட்பின்பெருமை உலகிற்கு உணர்த்தப்பட்டது.

நல்ல நண்பனை தேர்தெடுத்தல் மிகவும் அவசியமாகும் நல்ல நண்பனை அவனது இனம், குணம், பெருமை என்பவற்றை அவதானித்து அறிந்தே நட்பு கொள்ளல் வேண்டும். நல்ல நல்ல புத்தகங்களைத் தேடி ஆராய்ந்து படிக்கும் போது எவ்வாறு இனிமையாக இருக்குமோ அதைப்போல தான் நல்ல நண்பணுடன் பழகப்பழக இனிமையாக இருக்கும்.

முகத்தில் சிரித்து பேசி பழகும் நட்பை விட அகத்தாலும் மகிழ்ந்து நண்பனை பாராட்டி கூடிப் படிக்கும் நட்பே சிறந்தது. நண்பனை தீய வழியில் சென்று தீயவற்றைக் கடப்பிடிக்கும்போதுஅவற்றை கன்டித்து நண்பனை நல்வழியில் கொண்டு வருவதே நட்பாகும். ஓர் நண்பன் நம்மோடு பழகிய உரிமையால் தானகவே ஓர் முடிவெடுத்துவினைபயனாக ஓர் செயலினை செய்தால் அவனுடன் நீண்டகாலமாகப்பேணி வந்த அழகான நட்பிபை முறித்துவிடாது நண்பன் நம் மீது கொண்ட அன்பாலோ அல்லது அதித உரிமையாலோ இதனை செய்துவிட்டான்னெநினைத்து நட்புறவு கொள்ளல் நல்ல நண்பனின்இலக்கணமாகும்.

அகத்தில் தீய எண்ணங்கள் வன்மங்களை வைத்து புறத்தே அதாவது முகத்தில் சிரித்து பொய்யாக முக பாவனை செய்து பழுகும் நட்பைவிலக்கிமனதிலேநல்ல பண்பையும் பாசத்தையும் உண்மையும் முகத்திலே உண்மையாக முகமலர்ந்து இனிமையாக பேசி பழகும் நட்பை நாம்என்றுகைவிடாது பேணி கொள்ள வேண்டும் இதனை

முகமது நட்பது நட்பன்று
அகமது நட்பது நட்பு

என்னும் குறள் மூலம் திருவள்ளுவர் நட்பின் உண்மைத் தன்மையை வெளிப்படுத்தியுள்ளார்.

நாம் தீய நட்பினை வளர வளர ஆபத்து என எண்ணி தேய்ந்துபோவதேநல்லதென நினைத்து ஆரம்பத்திலே அதனை நீக்கிவிடவேண்டும் ஏணெனில்ஒருதீயநட்பினை கைக் கொள்ளல் பல ஆயிரம் கணக்கான போர்களை எதிர்கொள்வதற்கு சமமென வள்ளுவர்கூறுகின்றார்.நல்ல குணம்இ நல்ல வழியில் நட்பண்புகளைக் கொண்ட வன்தீயவற்றுக்குஅஞ்சுனை நட்புக்கொள்ளல் மிக அவசியமாகும்.அவனை எவ்வளவு விலை கொடுத்தும் வாங்கி கொள்ள வேண்டும்.ஆயிரம் நல்லநண்பர்கள்இருப்பினும் ஒரு தீய நண்பன் இருந்தால் அவ் நல்ல நண்பர்கள் குணத்தையே அழித்துவிடும்.

நட்பு மனிதர்களிடம் மாத்திரமல்ல உயிரினங்கள் மற்றும் இறைவனிடத்திலும் தோன்றும். நாம் பல உயிரினங்களுடன் வாழ்கின்றோம்.அவற்றின் மேல் பாசம் வைக்கின்றோம் இவற்றின் மேல் பாசம் வைக்கின்றோம் இவற்றிக்கு எல்லாம் அடிப்படையான காரணி நட்பாகும். உதாரணமாக நாயுடன் நட்பு கொள்ளாமல் அதை வெறுத்தோமானால்அதுவும்நம்மை வெறுத்து நமக்கு தீமையையே உண்டாகும். ஒரு பாகன் ஒரு யானையை சிறுவயதிலிருதே வளர்த்து வந்தாலும்இருவரும்நட்புடன் காணப்படுவார்அவன்திடிரென அவ் யானையை வெறுத்து நட்பை மறந்தானானால் அவ் யானையினாலேயே அவன் கொள்ளப்படுவான் நாம் உயிரினத்தின் மீது நட்புடன் அன்புபாரட்டினால்அவையும் நம்மீது நட்பு பாரட்டும்

நட்பு எனப்படும் பண்பானது இறைவனிடத்திலும் ஏற்படும் உதரணமாக இராமன் சீதையை இழந்தது சீதையை தேடி காட்டிற்குள் செலலும் போது வானவ இனத்திரான ஹனுமான்இராமன்மீதுபக்கி கொண்டு சிறந்த பக்தனாக மாறுகின்றான். அதேபோல் இராமன் சீதை இலக்குவணணோடு காட்டிற்குள் நுலையும்போது குகனுடன் நட்பு கொண்டதால்தான் கங்கையை கடப்பதற்க்கு உதவி கிடைத்தது. குகனும் இராமனும் சிறந்த நண்பர்கள் என இரமாயணத்தில் கூறப்படுகின்றுது. இதேபோல் மன்னர்கள் விழியில் பார்தோமானால் துரியோதனன் தீயவனாக காணப்பட்டாலும்அவனுடன் நட்பு கொண்ட காரணத்தால் கர்ணன் அவனிற்காகவே போரிட்டு கடைசியில் உயிர் நீங்குகின்றான். இதனால் இவர்களின்நட்புஇன்றுவரை உலகில்பேசப்பட்டுகொண்டு இருக்கின்றது.

ஆணுக்கும் ஆணுக்கும் இடையில் ஏற்பட்ட நட்பு கடைசிவரை நட்பாகவும் பெண்ணிற்கும் இடையில் ஏற்பட்ட சில வேளைகளில் காதலாக மாறுகின்றது. ஏனெனில் ஆணிற்க்கும் ஆணிற்கும் அல்லது பெண்ணிற்கும் பெண்ணிற்கும் இடையில் ஏற்பட்ட நட்டபு ஒரு பால்ணணர்ச்சியால் ஏற்பட்டது. ஆனால் ஆணிற்கும் பெண்ணிற்க்கும் இடையில் ஏற்பட்ட நட்பு ஒருபால் உணர்ச்சியால் ஏற்பட்டது அதனாலேயே காதலாக மாறுகின்றது.இது தாய் மகனிற்க்கும் அல்லது தந்தைக்கும் மகளிற்க்கும் இடையில் ஏற்பட்ட உறவு போன்றது.

ஆணிற்க்கும் பெண்ணிற்க்கும் இடையில்ஏற்பட்ட நட்புகாதலாகமாறுவதுஎல்லா சந்தர்பத்திலும் இல்லை சில சந்தர்பங்களில் மாத்திரமே அவ்வாறு மாறுகின்றது. ஆனால்அவர்களைகேட்டால் ஆரம்பத்தில் நண்பர்களாக இருந்தோம்பின்புகாதலர்காள மாறிவிட்டோம் என்பார்கள் உண்மையில் அவ்வாறு நடப்பதில்லை கண்களால் பார்த்து தோன்றிய வண்ணங்களே காதல் ஆகும். பார்த்து தோன்றிய வண்ணங்களேகாதலாகும். பார்த்த உடனே காதல் வந்துவிடும் அக்காதல் உணர்ச்சிகளை மறைப்பதற்காகவே நட்பு எனும் பொய் வேடத்தைப் பூணுகின்றார். கண்கால் பூக்கும் ஓர் அழகான உணர்ச்சியே காதல் ஆகும். காதலார்களாகி நட்பு கொள்ளாம் நண்பர்களாகி காதலர்களாவது ஏற்றுக் கொள்ளமுடியாதஏர்விடயமாகும்.

நட்பு என்பது உலகிலே சிறந்த ஓர் பண்பாகும். நட்பு இல்லை யெனில் உலகில் மனிதர்களுடன் வாழ்வது கடினமாகும் எந்தவொரு விடயத்திற்கும் நட்பு அவசியமாகின்றது. நட்பானது உலகில் பெறுமதி மிக்க ஒன்றாகும். சிறந்தநல்லதொரு நட்பிருந்தால்உலகில்எதனை வேண்டுமானாலும்வென்றுவிடுடியும்எனும்பலநன்மைகளை எடுத்து காட்டி நட்பின் உண்மைத் தன்மையை அழகாகவள்ளுவப்பெருமான் எடுத்துகாட்டிவிளக்கியுள்ளார். நாம் நட்பின் பெருமையை உணர்ந்து நட்பின் வழி ஒழுகி சிறந்த நண்பர்களாக உருவெடுப்போம்.

**செல்வி. செ.பவதாரணி**
**யா/வேம்படி மகளிர்**
**உயர்தரப் பாடசாலை**



காலைக்கதிர் Kalaikkathir

## சோபகிருது புத்தாண்டு

# சைவ சமயிகள் அறிந்து அனுஷ்டிக்க வேண்டியன அற்புதத்திருநாள்

இலங்கையில் சிங்கள மொழி பேசும் சகோதரர்களும் தமிழ் பேசும் உறவுகளும் இணைந்து கொண்டாடும் இந்த தேசத்தின் ஒற்றுமைத் திருநாள் சித்திரைப் புத்தாண்டு. ஆகவே, இந்து பௌத்த பண்பாட்டு கலாசார ஒற்றுமையை வலியுறுத்தும் அற்புதத்திருநாள். ஆனால், இதை இப்படி சிந்திப்போரே மிக குறைவு.

அவ்வாறு சிந்திக்கிற போது இந்த இலங்கைத் திருநாட்டில் கொண்டாடப்படும் அனைத்து விழாக்களை விடவும் இவ்விழா பண்பாட்டு ரீதியாக மிகவும் முதன்மை பெறுகிறது.

இலங்கையில் மட்டுமல்ல, மாந்தளிரின் மணமும், மாங்கனியின் இனிப்பும், மலர்களின் வாசமும், வேனில் தொடக்கத்தின் இளஞ்சூடும், வேம்பின் புது மெருகும் கலந்த வசந்த காலம் இன்றைய தெற்காசியாவை விட நீண்டதான பழைமையான பாரத தேசத்தில் பல்வேறு பிரதேசங்களிலும் கொண்டாட்டத்திற்கும் விழாக்களுக்குமான காலம்.

இதே தமிழ் சிங்கள புத்தாண்டை விஷு என்று கேரளாவும், பொஹெலா பைசாக் என்று வங்க தேசமும் மஹாபிஷுவ சங்க்ராந்தி என்ற் ஒதிாவும் ரங்கோலி பிஹூ என்று அஸ்ஸாமும் பைசாகி பஞ்சாப் விழா என்று சீக்கியர்களும் சைத்ர பிரதிபதா என்று உபி.பிகாரிலும் புத்தாண்டாகவே பாரம்பரியமாக கொண்டாடுகிறார்கள்.

இந்த திருவிழாக்கள் அந்தந்த பிரதேச பஞ்சாங்கங்களின் படி இன்றோ நாளையோ கொண்டாடப்படுகின்றன.

ஆகவே, இந்த பண்டிகை இந்து பண்பாட்டின் பண்டிகை. (பௌத்தமும் இந்து பண்பாட்டின் ஒரு வடிவம்) ஆனால், இந்து பண்பாட்டின் ஒற்றுமையை விரும்பாத தமிழகத்து அரசியல் வாதிகள் சிலர் தமிழர்களுக்கு தையில் புத்தாண்டு என்று முழங்கி தோற்றுப்போயினர். இந்துக்களை ஒன்றுபடுத்தும் விழாக்கள், சம்ஸ்கிருத மொழி, கோயில்கள் இவைகளை கேள்விக்கு உட்படுத்துவது இந்து ஒற்றுமையை குலைத்து மத மாற்றம் அல்லது பண்பாட்டு வீழ்ச்சிக்கு உள்ளாக்க முனைவதாக கருத வேண்டியிருக்கிறது.

ஆகவே, வரலாறு, தொல்லியல், இலக்கியச் சான்றுகள் வழி தமிழ் பேசும் சைவர்கள் அல்லது இந்துக்களான எங்களுக்கு சித்திரையே புத்தாண்டு என்பதில் மிக தெளிவாக இருத்தல் அவசியம்.

சைவ சமயிகளுக்கு சிவாகமங்கள் முக்கிய பிரமாணங்கள். அவை சித்திரையே முதன்மை மாதமாக சொல்வதால் சைவ சமயிகள் என்று தம்மை கருதிக் கொள்வோர் வேறு விதமாக சிந்திக்க இயலாது.

ஜோதிடத்தில் பன்னிரெண்டு ராசிகளில் முதல் ராசியான மேத்தில் சூரியன் புகும் நாளே இந்த புத்தாண்டாகும்.

எமது நாட்காட்டி என்பது இராசி கட்டத்தை காலக் கணிப்பில் பயன்படுத்தும் சூரிய நாட்காட்டி என்பதால் தான் மேத்தில் சூரியன் நுழையும் நாளை தமிழ் புத்தாண்டாக கொண்டாடுகிறோம்.

சித்திரை முதல் நாளில் தான் வழக்கமாக வேங்கை மரம் பூக்கும். தமிழ் புத்தாண்டின் சிறப்பை சங்க இலக்கிய நூலான நெடுநெல்வாடை கூட குறிப்பாகச் சொல்வதாக அறிஞர்கள் கருதுவர்.

தமிழ்ப் புத்தாண்டு எண்டு சொல்றீங்களே அதென்ன வருடப் பெயர் எல்லாம் ப்லவ, சார்வரி, துர்முக, விளம்பி, ஹேவிளம்பி, சுபகிருது, சோபகிருது அப்படி இருக்கு. இதெல்லாம் தமிழா? - என்று சிலர் கேட்பதையும் பார்க்கிறோம்.

வருடங்களின் பெயர்கள் மட்டுமல்ல, தமிழின் இரண்டாயிரம் ஆண்டுக் கால பண்பாட்டில், அதன் இலக்கியம், இலக்கணம், சமயம், தத்துவம், கலை, மருத்துவம் கணிதம் உள்ளிட்ட அறிவுத் துறைகள் இவை எல்லாவற்றிலும் சம்ஸ்கிருதம் பிரிக்க முடியாதபடி ஒன்று கலந்திருக்கிறது.

ஓம் நமசிவாய, ஓம் நமோ நாராயணாய, ஓம் சரவணபவ, ஓம் சக்தி - இதெல்லாம் தமிழா? இவற்றை ஓதுவதை ஒழிப்போம் என்று நமது புனித மகாமந்திரங்களைக் குறித்தும் இதே வாதத்தை வைத்து நாளை யாரும் சொன்னால் ஏற்க முடியுமா ?

விபவ முதலான அறுபது ஆண்டுகளின் பெயர்களைப் பல நூற்றாண்டுகளாக தமிழ் மன்னர்களும் தமிழ்ச் சான்றோர்களும் அறிஞர்களும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். எனவே, அது தமிழ்ப் பண்பாடு சார்ந்தது.

இப்படி அற்புதமான சிறப்புகள் வாய்ந்த வரப்போகும் இந்த தமிழ்ப்புத்தாண்டு எப்படி இருக்கும் என்று பார்ப்போம்.

இந்த சோப கிருது வருடம் 37வது ஆண்டு ஆகும். தமிழில் இந்த ஆண்டுக்கு மங்கலம் என்று பொருள்.மங்கலம் என்றால் நன்மையான விசயங்கள் வரும் வருடத்தில் நடக்கப்போகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்!

இந்த சோபகிருது வருடம் 14.04.2023 இன்று இலங்கை - இந்திய நேரம் அண்ணளவாக, பகல் 2.03 க்கு திருவோணம் நட்சத்திரத்தில் பிறக்கிறது.

இந்த சோபகிருது வருடப்பிறப்பு நேரம் ஆஸ்ரேலியாவில் மாலை 6.33 மணியாகியும், பிரித்தானியாவில் காலை 9.33 மணியாகவும் கனடாவில் அதிகாலை 3.33 மணியாகவும் மலேசியாவில் மாலை 4.33 மணியாகவும் அமைகிறது.

இடைக்காடர் சித்தர் அறுபது வருடங்களுக்கும் அதாவது ஒவ்வொரு தமிழ் வருடங்களுக்கும் ஒவ்வொரு வெண்பா எழுதி இருப்பதாக சொல்லப்படுகிறது.

அதனடிப்படையிலே அந்த வருடம் எப்படி இருக்கப்போகிறது என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம் என்றொரு நம்பிக்கை உண்டு.

சோபகிருது தன்னிற் தொல்லுவதெல்லாம்
செழிக்கும்!
கோபமகன்று குணம்பெருகும் - சோபனங்கள்
உண்டாகும் மாரியொழியாமற் பெய்யும் எல்லாம்
உண்டாகுமன்றே உரை!

என்பது இந்த ஆண்டுக்கான வெண்பா.

இந்த வெண்பாவின் பொருள் என்னவென்றால் சோபகிருது வருடத்தில் உலகில் உள்ள ஊர்கள் எல்லாம் சிறப்பும், செழிப்பும் அடையும்.

எங்கும் செல்வம் நிறைந்திருக்கும்.மக்கள் மத்தியில் கோபம், பொறாமை போட்டி முதலிய தீய பண்புகள் நீங்கும். உலக மக்கள் அனைவரும் சண்டை சச்சரவு இன்றி ஒற்றுமையாக வாழ்வார்கள். நற்குணங்கள் மேலோங்கும். சுபமான மங்கலகரமான நிகழ்ச்சிகள் நடைபெறும். மழை பொய்க்காது பெய்யும் எல்லா நலன்களும் பெற்று மக்கள் வாழ்வர் என்பதாகும்.

சோபகிருது வருடத்தில் ராஜாவாக புதன் வருகிறார். மந்திரியாக சுக்கிரனும், சேனாதிபதியாக குருவும் வருகின்றனர். அர்க்காதிபதியாக சுக்கிரன், மேகாதிபதியாக குருவும் வருவது சிறப்பு. ஸஸ்யாதிபதியாக சந்திரன், ராஜாதிபதியாக புதன்,நீராதிபதியாக சந்திரன், தானியாதிபதியாக சனி, பசுநாயகராக பலதேவர் வருகிறார்கள்.

சோபகிருது வருடத்தில் புதன் ராஜாவாகவும் ராஜாபதியாகவும் வருவதால் கல்வி, கலைகள், தொழில்கள் செழிக்கும்.

அனைத்துவகை பயிர்களும் செழிப்பாக வளர்ந்து நல் விளைச்சலை கொடுக்கும்.அருமையாக மழை பொழிந்து நாடு செழிக்கும்.

அனைத்து துறையினரும் மேன்மை அடைவார்கள்.ஆன்மிகமும்,ஜோதிடமும் செழிக்கும். தொழில்துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் மேன்மை பெறும்.

விவசாயம் செழிக்கும். நாட்டுமக்கள் சுகத்துடனும்,மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். பட்டு சேலை, நகை, ஆடை ஆபரண தொழில் செய்பவர்கள் வளர்ச்சியடைவார்கள்.

இந்த ஆண்டின் பிறப்பை ஆனந்தமாக கொண்டாடுகிற உறவுகள் மருத்து நீர் வைத்து நீராடுவது எமது இலங்கை தமிழர்களின் சிறப்பு பாரம்பரியம்.

எமது யாழ்ப்பாண அரசர் கால இலக்கியமான சரசோதி மாலையிலேயே மருத்து நீர், கைவிஷேசம் என்பவற்றோடு கூடியதாக சித்திரைப் புத்தாண்டு குறிப்பிடப்பட்டுள்ளமை சிறப்பாக எமக்கும் இந்த விழாவுக்குமான தனித்துவ மரபுகள் எழுநூறாண்டுகளுக்கு மேலாக நிலைபெற்றிருப்பதை காட்டுகிறது.

ஆகவே இன்று காலையிலேயே புத்தாண்டை கொண்டாட ஆரம்பிப்பது நல்லது. வரும் மதியம் தானே பிறக்கிறது என இருப்பது அழகல்ல.

ஆயினும் விஷு புண்ணிய காலத்தில் சிறப்பாக மருத்து நீர் வைத்து நீராடி புத்தாடை புனைந்து வழிபாடுகளை ஆற்றலாம்.

சித்திரை 2ஆம் நாள் சனிக்கிழமை மற்றும் 3 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகியனவும் திதி, நட்சத்திரம், யோகம் சிறப்பாக இருக்கிறது. எனவே அந்நாட்களில் கைவிசேம் முதலிய புத்தாண்டு கருமங்களைச் செய்யலாம். அந்த நாட்களில் ராகு காலத்தை நீக்கி இந்த நிகழ்வுகளை முன்னெடுக்கலாம்.

இனிய சோபகிருது வரும் எல்லார் வாழ்விலும் இன்பமே பெருக்க பிரார்த்திப்போம். எல்லாம் வல்ல உமையொரு பாகனான இறைவன் எம் பிழை பொறுத்து கருணை கொண்டருள பிரார்த்திப்போம்.

பெருக லாந்தவம் பேதைமை தீரலாம்
திருக லாகிய சிந்தை திருத்தலாம்
பருக லாம்பர மாயதோ ரானந்தம்
மருக லானடி வாழ்த்தி வணங்கவே.

சிவஸ்ரீ. தி. மயூரகிரி சிவாச்சார்யார்,
சனாதன சைவ சேவா சபா- நீர்வேலி




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.04.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 30 வியாழக்கிழமை 13.04.2023 கதிர் 27

## கணக்கறிக்கை தாரதது ஏன்?

### கட்சிகளிடம் விளக்கம் கேட்கிறது ஆணைக்குழு

கணக்கறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சி களிடத்தில் தேர்தல்கள் ஆணைக்குழு விளக்கமளிக்கும்அறிக்கையைசமர்ப்பிக்குமாறு கோரியுள்ளது.

சில அரசியல் கட்சிகள் 2021ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கையை சமர்ப்பிக்காது தொடர்ச்சியாக தாமதப்படுத்தி வந்த நிலையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுமேற்கண்டவாறு கோரிக்கைமுன்வைத்துள்ளது.

ஏற்கனவே அரசியல் கட்சிகள் தமது தேர்தல் கணக்கிறிக்கையை சமர்ப்பிப்பதற்காக வழங்கப்பட்ட கால அவகாத்திற்கு மேலதிகமாக 14 நாட்கள் 

2

## ரணிலை விட திறமையான வேட்பாளர்கள் 'மொட்டு'வில்

### சாகர இப்படிப் பதில்



அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இன்னும் எந்த முடிவையும் எடுக்கவில்லை. ரணில்விக்கிரமசிங்கவைவிடவும் திறமையான வேட்பாளர்கள் மொட்டுக் கட்சியில் உள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை மொட்டுக் கட்சி எடுத்துள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே எமது கட்சி வேட்பாளர் அறிவிக்கப்படுவார். ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் காலம் உள்ளது. தற்போது அது பற்றி அறிவிப்பது ஏற்புடையது அல்ல. ரணில் விக்கிரமசிங்கவை விடவும் திறமையான வேட்பாளர்கள் எமது கட்சியில் உள்ளனர். – என்றார்.

## இலங்கையின் கடன் சுமையை அனைவரும் பகிர வேண்டும்

### சீனா வேண்டுகோள்



இலங்கைக்கான கடன் சுமையைச் சரிசெய்வதில் சீன நிதி நிறுவனங்கள் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்று தெரிவித்துள்ள சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின், ஏனைய தரப்புக்களும் கடன்சுமையைப் பகிர்ந்துகொள்ளவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன்மீறு சீரமைப்பு தொடர்பில் இந்தியா, யப்பான், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இன்றையதினம் கருத்துக்களை வெளியிடவுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

*இலங்கை நிலைமையை வழிநடத்துவதற்கும், அதன் கடன்சுமையைகுறைப்பதற்கும், நிலை யான அபிவிருத்தியை அடைவதற்கும்உதவுவதில்சீனா சாதகமானபங்கைவகிப்பதற்காக தொடர்புடைய நாடுகள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கு தயாராகவே உள்ளது. இலங்கையின் கடன் சுமையை நியாயமான பகிர்வின் அடிப்படையில் அனைத்துத் தரப்புக்களும் பொறப்பேற்றுக்கொள்வதோடு, இலங்கையின் கடன் மறுசீரமைப்பில் பங்கேற்குமாறு வர்த்தக மற்றும் பலதரப்பு கடன் வழங்குநர்களுக்கு சீனா அழைப்பு விடுகின்றது.*

*சீனாவின் ஏற்றுமதிஇறக்குமதி வங்கி, உத்தியோகபூர்வ இருதரப்பு கடன்வழங்குநராக, இலங்கை நிதியமைச்சகத்திற்கு அதன்நிதி ஆதரவு ஆவணங்கள் ஊடாக 2022 மற் றும் 2023 ஆம் ஆண்டுகளில் வங்கி கடன் சேவையை நீட்டிக்கப் போகிறது என்று தெளிவாகக் கூறியுள்ளது. இதன் மூலமாக இலங்கை சீனாவுக்கான குறுகிய கால கடனை திருப்பிச் செலுத்தும் அழுத்தத்திலிருந்து விடுபட உதவும் வகையில், குறித்த காலப்பகுதியில் கடன்களுக்கான அசல் மற்றும் வட்டியை இலங்கை திருப்பிச் செலுத்த வேண்டியதில்லை.*

*இக்காலப்பகுதியில்நடுத்தர மற்றும் நீண்ட கால கடன் மறுசீரமைப்பு தொடர்பாக இலங்கையுடன் நட்புறவான கலந்துரையாடல்களை மேற்கொள்ளகுறித்தவங்கிவிரும்புவதோடு, இலங்கையின் கடன் நிலைத்தன்மைக்கு பங்களிக்க அவ்வங்கி சிறந்த முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது - என்றார்.*

## எல்லை நிர்ணய மீளாய்வுக்கு ஏப்ரல் 27 வரையும் காலக்கெடு

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவில்பரிந்துரைகள், மறுசீரமைப்புக்கள் உள்ளிட்ட விடயங்களை முன்வைப்பதற்கு ஏப்ரல் 27ஆம் திகதி வரையில் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அறிவித்தலை விடுத்துள்ளார் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான இராஜாங்க அமைச்சர் ஜனாக வக்கும்புர,

தேசிய எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இரண்டாவது அறிக்கை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை முழுமையானது அல்ல.

குறித்த அறிக்கையில் காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பில் மறுசீரமைப்புக்கள், பரிந்துரைகள், திருத்தங்கள் காணப்படுமாயின் அவற்றினை முன்வைப்பதற்கு உரிய தரப்புக்களுக்கு வாய்ப்புக்களை வழங்கவுள்ளோம்.

ஆதனடிப்படையில் அரசியல் கட்சிகள், சிவில் சமுகத்தினர், மதத் தலைவர்கள் உள்ளிட்டவர்கள் தமது பரிந் துரைகள், கருத்துக்களைச் சமர்ப்பிக்க முடியும். அதற்கான கால எல்லை ஏப்ரல் 27 வரை உள்ளது.

அதன் பின்னர், எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை தயாரிக்கப்படவுள்ளது – என்றார்.



## சகல கட்சிகளும் அரசுக்கு ஆதரவு வழங்க வேண்டும்

### தனியாக இணையமாட்டேன் என்கிறார் ராஜித



அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கால எல்லையின் அடிப்படையில் அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும், இந்த விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலை வகிக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தனக்குத் தனிப்பட்ட ரீதியில் அரசுடன் இணையும் எண்ணம் இல்லை எனவும் அவர் கூறினார்.

ஒரே அரசியல் கோட்பாடுகளைக் கொண்ட இரண்டு குழுக்களை, நடைமுறையில் உள்ள சில முரண்பாடுகளைக்காட்டி, பிளவுபடுத்து–வது, நாட்டுக்கும், இரு கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் இழைக்கும் அநீதி என்பதே எனது கருத்து – எனவும் ராஜித குறிப்பிட்டார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஒழுக்காற்று விசாரணை குழுவுக்குத்தான் அழைக்கப்பட்டுள்ளதாகவெளியாகும்தகவல் உண்மைக்குப் புறம்பானது எனவும் ராஜித மேலும் கூறினார். (02)

## மாகாணசபை முறைமை நீடிப்பதாயின் மக்கள் பிரதிநிதிகளிடம் கையளியுங்கள்

### தென்மாகாண ஆளுநர் விவிகமகே தெரிவிப்பு

மாகாண சபை முறைமை தொடர்ந்து இருப்பதாக இருந்தால் அதனை மக்கள் பிரதிநிதிகளிடத்தில் கையளிக்க வேண்டும் என்று தென்மாகாண ஆளுநர் விலிகமகே தெரிவித்துள்ளார்.

தென்மாகாணஆளுர்அலுவலகத்தில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் பதவியேற்ற காலத்திலிருந்து மாகாண சபைகள் முறைமையானது மக்கள் பிரதிநிதிகளிடத்திலேயே இருக்க வேண்டும்என்றுவலியுறுத்திவருகின்றேன்.

மாகாண சபைகள் முறைமையை இரத்துச் செய்வதா இல்லையா என்பது அரசுதீர்மானிக்க வேண்டிய விடயமாகும். ஆனால் மாகாண சபைகள் முறைமை தொடர்ந்தும் இருக்க வேண்டுமாயின் அதனை ஆளுநரின் கீழோ அல்லது அதிகாரிகளின் கீழோ வைத்திருப்பது பொருத்தமானது அல்ல.

மாகாண சபைகளை மக்கள் பிரதிநிதிகளிடத்தில் கையளிக்கவேண்டும். அதன் மூலமாகவே, அதன் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க கூடியதாக இருக்கும் – என்றார்.

## உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் நீதி நிலை நாட்டப்படவில்லை

### பாரப்பரசரின் பிரதிநிதி தெரிவிப்பு

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடைபெற்று நான்கு வருடங்களாகின்றபோதும்இதுவரையில் நீதி நிலைநாட்டப்படவில்லை என்று இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதியான அபோஸ்தலிக்கதூதுவர்அருட்தந்தை பிரையன் உடேக்வே தெரிவித்தார்.

புதன்கிழமை கண்டிக்கு வருகை தந்து மாநாயக்கர்களைத் தனித்தனியாகச் சந்தித்துப் பேசிய அவர், தலதா மளிக்கையையும் நேரில் பார்வையிட்டார்.

இதன்போது, மத்திய கிழக்குநாட்டில்ஏற்படுத்தப்பட்ட சமதான ஒப்பந்தத்தின் பிரதிகளையும் அவர் மகாநாயக்கர்களிடம்கையளித்தார், இலங்கையில் சகோதரத்துவமான நிலைமைகளை வலுவூட்டும்நோகத்துடனேகடமையைப் பொறுப்பேற்றதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம்பேசினார்அவர். அப்போது தெரிவித்ததாவது:

இலங்கையில் மிலேச்சத்தனமாக நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் நடைபெற்று நான்கு வருடங்களாகின்றன. இதுவரையில் அதற்கான நீதி நிலைநாட்டப்படவில்லை என்பதுதான் எமது நிலைப்பாடாகும்.

தற்போது இலங்கை ஆட்சியாளர்கள் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளைமுன்னெடுத்துள்ளபோதும், அச்சட்டம்பொதுக்களுக்கு எதிரான ஆட்சிய–ாளர்களின் செயற்பாடாகவே நாம் பார்க்கின்றோம்.

குறித்தசட்டமூலம்சம்பந்தமாக நாம் ஆய்வுகளைச் செய்யவில்லை என்றாலும், பொதுமக்களின் நிலைப்பாட்டையே நாம் கவனத்தில் கொள்கின்றோம். தற்போது அமைச்சர் விஜயதாச ராஜபக் குறித்த சட்டமூலம் சம்பந்தமாகக் கருத்துக்களைத் தெரிவிப்பதற்குக்காலஅவகாசம் வழங்கியிருப்பதாக அறிவித்துள்ளார்.

நாம் அச்சட்டமூலம் சம்பந்தமாக முழுமையான ஆய்வொன்றைநடத்தியதன் பின்னர் எமது உத்தியே–ாகபூர்வமான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவோம். அதே நேரம் இலங்கையானது பௌத்த மதத்தினை மையப்படுத்தியும், முன்னிலைப்படுத்தியும் செயற்படும் நாடாகும். ஏனைய மதங்களுக்கு உரிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் அண்மைக் கால நிகழ்வுகள் சில கவலைக்குரியதாக இருக்கின்றன. பாப்பரசரைப் பொறுத்தவரையில்அனைத்து இனங்களும், மதங்களும் ஒற்றுமையாக, நல்லிணக்கத்துடன் இருக்கவேண்டும் என்பதே அவரது நிலைப்பாடாகும் –என்றார்.

## ஏப்ரல் 15, 16 முற்றவெளியில் பாரம்பரிய உணவுத் திருவிழா



சித்திரை புத்தாண்டை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தினால் ஏப்ரல் 15, 16 முற்றவெளி மைதானத்தில் யாழ்ப்பாண பாரம்பரிய உணவுத் திருவிழா ஏற்பாடு செய்–யப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்

இன்று யாழ். மாவட்ட செயலகத்தில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாலை நேரங்களில் இந்த உணவு திருவிழா இடம்பெறவுள்ளது. ஒவ்வொரு நாளும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை உணவு திருவிழா இடம்பெறும்.

உணவு திருவிழாவில் யாழ்ப்பாணத்தில் உள்ள பாரம்பரிய உணவு வகைகளை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தவும் உள்ளூர் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பாரம்பரிய உணவு திருவிழாவை மேற்கொள்வதன் மூலம் அருகி வருகின்ற எமது நடைமுறைகள் பாரம்பரிய உணவு பழக்க வழக்கங்களை எமது இளைய சமுதாயத்திற்கும் சுற்றுலா பயணிகளுக்கும் ஏனையே–ாருக்கும் அறிமுகப்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

அந்த வகையில் 2

## பல்கலை ஆசிரியர்களின் தீர்மானத்துக்கு வரவேற்பு

### கல்வி அமைச்சு தெரிவித்தது

*பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது தொழிற்சங்கப் போராட்டத்தை ஏப்ரல் 17 முடித்துக்கொள்வதாக எடுத்த தீர்மானத்தைக் கல்வி அமைச்சு வரவேற்பதாக அறிவித்துள்ளது.*

*அதேபோன்று உயர்தர மாணவர்களின்விடைத்தாள் திருத்தும் பணிகள் தொடர்பிலும்பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் சாதகமான தீர்மானத்தை அறிவிக்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சு கேட்டுள்ளது.*

*பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் நிறைவேற்றுக்குழுத் தீர்மானத்துக்கு அமைவாகப் பல்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனம் முன்னெடுத்த தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்குக் கொண்டு வருவதாகப் புதன்கிழமை சங்கம் முடிவு செய்தது.*

*இந்த முடிவு குறித்துக் கல்வி அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் இந்த முடிவை வரவேற்றுள்ளதோடு, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்துடன் பலசுற்றுப் பேச்சுக்களை நடத்தியதாகவும் அந்தப் பேச்சுக்களில் கணிசமான இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.*

# அந்தமானில் 6 மாதங்களாக சிக்கித் தவிக்கும் கல்குடா மீனவர்கள் நால்வரை மீட்க கோரிக்கை








மட்டக்களப்பு – கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தபோது படகில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்த நிலையில், அந்தமான் தீவில் தங்கி நின்று, ஆறு மாதங்களுக்கு மேலாகிவிட்டது.

இன்னமும் இலங்கைக்கு திரும்ப முடியாமல் அத்தீவுக் கூட்டங்களில் சிக்கித் தவிக்கும் அந்த மீனவர்களை மீட்டெடுக்குமாறு சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான அமைச்சர் நஸீர் அஹமட் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இதில் பிரதேச மக்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டபோதே அந்தமான் தீவில் சிக்கித் தவிக்கும் கல்குடா மீனவர்கள் தொடர்பான விடயமும், கல்குடா அல் அமான் படகோட்டிகள் சங்க உறுப்பினரான எச்.எம். தௌபீக் மற்றும் மீன்பிடி உத்தியோகத்தரான முஹம்மத் இம்தியாஸ் ஆகியோரால் அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர்கள் –

மீனவர்களான ஏ.எம். முஹாஜித் (வயது 34), எம்.எச்.எம். றிஸ்வி (வயது 35), பி.எம். இர்ாத் (வயது 33), எம். அஸ்வர் (வயது 29) ஆகியோர் முறைப்படி மீன்பிடிக்கான அனுமதி பெற்றுக்கொண்டு கடந்த 2022 செப்ரெம்பர் 25 ஆம் திகதி வாழைச்சேனையிலிருந்து வங்காளக் கடலுக்கு மீன்பிடிக்க புறப்பட்டனர்.

எனினும், வழமையாக மீன்பிடியில் ஈடுபட்டு திரும்பும் குறிப்பிட்டதொரு காலத்தையும் தாண்டி, அவர்கள் கரை திரும்பாததால் நாங்கள் அவர்களை தேடத் தொடங்கினோம். அப்போதுதான் அவர்கள் சென்ற படகின் இயந்திரம் செயலிழந்து, அந்த மீனவர்கள் அந்தமான் தீவில் சிக்கித் தத்தளிப்பது தெரியவந்தது.

இந்நிலையில் இந்திய கரையோரக் காவல்துறையினர் அவர்களை காப்பாற்றி கண்காணிப்பில் வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக இலங்கை கடற்றொழில் அமைச்சு, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, இந்தியத் தூதரகம் உள்ளிட்ட இன்னும் பல இடங்களுக்கும் அறிவித்து, மீனவர்களை மீட்டுத் தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

ஆயினும், இப்பொழுது ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும், அவர்களை மீட்பதற்கான எந்தவித முயற்சியும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. எனவே, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல் அமைச்சருமான தங்களிடம் இந்த விடயத்தை சமர்பிக்கின்றோம். – என்றனர்.

அவர்களது கோரிக்கை தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் நஸீர் அஹமட், இந்த விடயத்துக்கு முன்னுரிமை அளித்து, அந்தமான் தீவில் சிக்கித் தவிக்கும் கல்குடா மீனவர்களை மீட்டெடுக்க அனைத்து விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். –என்றார்.

## அக்கராயன் கரும்புத்தோட்ட காணிகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தலைமையில் தீர்மானங்கள்



கிளிநொச்சி, அக்கராயன் பகுதியில் இருக்கின்ற கரும்புதோட்டக்காணிகளை பிரதேச மக்களுக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பயன்படும் வகையில் பயன்படுத்துவதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே குறித்த தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த காணியில் கரும்பு செய்கையை மேற்கொள்வதற்கு தனியார் தொழில் முயற்சியாளர் ஒருவர் ஆர்வம் செலுத்தி வருகின்ற நிலையில், சுமார் 10 ஏக்கர் காணியை குறித்த தொழில் முயற்சியாளருக்கு நீண்ட காலக் குத்தகைக்கு வழங்குவதற்கும், மூன்று ஏக்கர் காணியை கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் வழங்க திர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயிர் செய்கைகள் மேற்கொள்வதற்கு பொருத்தமான 146 ஏக்கர் காணிகளைகுறித்தபிரதேசத்தினை சேர்ந்த காணி அற்ற மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் அக்கராயன் பிரதேச சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கணக்கறிக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அந்தக் காலக்கெடுவும் கடந்தவாரத்துடன் நிறைவுக்குவந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்கு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில் கணக்கறிக்கைகள் தொடர்பில் உரிய தெளிவுபடுத்தல்களைச் செய்யாத அரசியல் கட்சிகளின் அங்கீகாரத்தை நீக்குவதற்கான நடவடிக்கை அடுத்துவரும் நாட்களில் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

## ஏப்ரல் 15...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாலை வேளையில் பாரம்பரிய வாத்தியங்களை கொண்ட இசை நிகழ்ச்சியும் மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் குறித்த நிகழ்வுகளில் கலந்து பயன்பெறுமாறு அறிவித்துள்ளார். (03)

## குளவி கொட்டி தொழிலாளர்கள் 11 பேர் பாதிப்பு

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கக்கலை, கேம்பிரி மேற்பிரிவு தோட்டத்தில் 11 தோட்டத் தொழிலாளர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

இன்று முற்பகல் 9 மணியளவிலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 10 பெண் தொழிளாலர்களும், ஒரு கங்காணியும் இலக்காகியுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 3 பெண் தொழிலாளர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

தேயிலைத் தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளையில் மரத்தில் இருந்த குளவிகள் கலைந்து தொழிலாளர்களைத் தாக்கியுள்ளது. (02)

## ரயிலில் மோதுண்டு நபர் பரிதாபச் சாவு



ரயிலில் மோதி 45 வயதுடைய நபரொருவர் பலியாகியுள்ளார் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சந்திவெளி – ஜீவபுரம் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி வரதராசா எனும் 45 வயதுடைய நபரே ரயிலில் மோதுண்டு உயிரிழந்தார்.

கடற்தொழிலில் ஈடுபடும் இவர் மதுபோதைக்கு அடிமையானவராக இருந்துள்ளார்.

வழமையாக காலையில் கடலுக்கு சென்று மாலையில் வீடு திரும்பும் இவர், சிலநாள்களில் இரவு நேரத்திலும் கடலுக்கு சென்று வருவார்.

சம்பவ தினமான 11 ஆம் திகதி இரவு 08.45 மணியளவில் அதிகரித்த போதையுடன் கடலுக்கு சென்றுவருவதாக கூறிச் சென்ற இவர் ஜீவபுரம் ரயில் பாதையில் அமர்ந்திருந்த போது, கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயில் இரவு 10.00 மணியளவில் அப்பாதையால் வரு வதை கண்டு எழுந்து செல்ல முயற்சித்தபோதும், அதிக போதை சுயகட்டுப்பாட்டை இழக்க வைத்ததால் அவ்விடத்திலேயே ரயிலில் மோதுண்டு தலை, கழுத்து, நெஞ்சு பகுதிகள் ரயிலில் சிக்கி கை, கால்கள் உடைந்த நிலையில் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளார்.

இவரது சடலத்தை அணிந்திருந்த ஆடைகளை வைத்தே உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

சடலம், அதே ரயில் மூலம் ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

சந்திவெளி பொலிஸ் பொறுப்பதிகாரியின் அழைப்பின் பேரில் சம்பவ இடத்துக்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் விசாரணைகளை முன்னெடுத்து பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்ல பொலிஸாரைப் பணித்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சென்ற 3 ஆம் திகதியும் இதே விதமான மரணமொன்று சந்திவெளி பொலிஸ் பிரிவு முறக்கொட்டாஞ்சேனையில் பதிவானதும் குறிப்பிடத்தக்கது.

## போதைப்பொருள் பாவனை: நிந்தவூரில் 9 பேர் சிக்கினர்!



போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்ட 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை மாவட்டம், நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஜேர்மன் நட்புறவு பாடசாலை அருகில் உள்ள பிரதேசத்தில் சந்தேகத்துக்கிடமாகப் பலர் நடமாடுகின்றனர் என்று பொலிஸ் விசேட பிரிவுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீப் தலைமையில் நேற்றிரவு சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 9 சந்தேகநபர்கள் பல்வேறு போதை தரக்கூடிய பொருட்களுடன் கைதாகியுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் நிந்தவூர் பொலிஸ் பிரிவில் இரவு வேளைகளில் சந்தேகத்துக்கிடமாக நடமாடி ஆளடையாளங்களை உறுதிப்படுத்தத் தவறியவர்களும் சந்தேகத்தின் அடிப்படையில் தினமும் கைது செய்யப்பட்டு வருகின்றனர். (02)

## ரயில் மோதி குடும்பஸ்தர் சாவு!

### நானுஓயாவில் சோகம்



ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாகச் சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் நானுஓயாவில் இன்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

நானுஓயா, கிலோசோ தோட்டத்தை சேர்ந்த 44 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை சிறிதரன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த ரயில் மோதியே குறித்த குடும்பஸ்தர் பலியாகியுள்ளார்.

நானுஓயா ரயில் நிலையத்துக்கு முன்பாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. சடலம் மீட்கப்பட்டு தற்போது நானுஓயா ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்துள்ள குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (02)

# புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தில் மனித உரிமை மீறல்கள் உள்ளனவா? இல்லையா? என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும்!

## நீதி அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தில் மனித உரிமைகளை மீறும் வகையிலான ஏற்பாடுகள் காணப்படுகின்றனவா இல்லையா என்பதை நீதிமன்றமே தீர்மானிக்கும்.

சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாகத் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீதான பரிசீலனைகளின் அடிப்படையில் திருத்தங்களை செய்ய வேண்டியேற்படின் அரசாங்கம் நிச்சயம் அதற்கான நடவடிக்கையை எடுக்கும் என நீதி , சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாஸ ராஜபக் ஷ தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்று சர்வதேசம் உட்பட பல்வேறு தரப்பினரும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றமை தொடர்பில் தெளிவுபடுத்தும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் தொடர்பாகப் பல்வேறு தரப்பினராலும் பல கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. அது தொடர்பாகத் தெளிவான விளக்கமின்றியும் சிலர் கருத்துக்களை முன்வைக்கின்றனர். இந்த சட்ட மூலத்தில் பிரதானமாக இரு விடயங்களில் மாத்திரமே மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

அதற்கமைய பாதுகாப்பு அமைச்சருக்கு தடுப்புக்காவலில் வைப்பதற்கான உத்தரவு பிறப்பிப்பதற்கு காணப்படும் அதிகாரத்தை அவரிடமிருந்து நீக்கி , பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கு நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் செயற்படக் கூடிய–வாறு சட்ட முறைமையை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக பொலிஸாரிடம் வழங்கப்படும் வாக்குமூலங்களின் அடிப்படையில் தண்டனை வழங்கும் முறைமை நீக்கப்பட்டுள்ளது.

பிரதி பொலிஸ்மா அதிபர்கள் தன்னிச்சையாக செயற்படக் கூடிய சூழல் உருவாகக் கூடாது என்பதற்காகவே அவர்களின் செயற்பாடுகளை நீதிவான் நீதிமன்றங்களின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிரதி பொலிஸ்மா அதிபர்கள் தன்னிச்சையாக செயற்படுவதைத் தடுப்பதற்கு தற்போதுள்ள முறைமையின் அடிப்படையில் அனைத்து அதிகாரங்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத் திரம் தன்வசம் வைத்துக் கொள்வது பொறுத்தமானதா என்று இந்த சட்ட மூலத்தை எதிர்ப்பவர்கள் சிந்திக்க வேண்டும்.

இந்த சட்ட மூலத்தில் மனித உரிமைகள் மீறப்படுகின்றனவா என்பதை எம்மால் குறிப்பிட முடியாது. ஏற்கனவே திட்டமிட்டிருந்தபடி கடந்த 4 ஆம் திகதி இந்த சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தால் 18 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றத்தில் இதற்கு எதிராக மனு தாக்கல் செய்திருக்க முடியும்.

எனினும் இவ்வாரம் விடுமுறைக் காலம் என்பதால் தமக்கான கால அவகாசம் போதாது எனக் குறிப்பிட்டு காலம் தாழ்த்துமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே இம்மாத இறுதி வாரத்தில் சட்ட மூலத்தை சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம். நீதிமன்றத்தில் தெரிவிக்கப்படும் எதிர்ப்புக்களுக்கமைய திருத்தங்கள் மேற்கொள்ளப்படும். – என்றார்.

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை 2025 வரை ஒத்திவைக்கும் நிலை

## ரேஹண ஹெட்டியாராட்சி தெரிவிப்பு



நீதிமன்ற உத்தரவு ஒன்றை தவிர 2025 வரை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இடம்பெறுவது தொடர்பாக நிச்சயமில்லாத நிலை இருந்து வருகிறது.

தேர்தலை நடத்துவதற்கான எந்த முயற்சியையும் அரசாங்கம் எடுப்பதாகத் தெரியவில்லை என பெப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைப்பதற்கு தேர்தர் ஆணைக்குழு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாகத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்துவதை ஒத்திவைக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்த தேர்தல் இந்த வருடம் இடம்பெறுவதற்கு மிகவும் குறுகிய சந்தர்ப்பமே தற்போது இருக்கிறது.

தேர்தலை நடத்துவதற்கும் அரசாங்கம் எந்த தயாரும் இல்லாத நிலையே காணக் கூடியதாக இருக்கிறது.

அத்துடன் நாட்டின் தேர்தல் சட்டம், அரசமைப்பு மற்றும் நீதிமன்ற உத்தரவு ஆகிய எதனையும் கருத்திற்கொள்ளாது அரசாங்கம் உள்ளூராட்சி மன்ற தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு செல்வதையே காணக் கூடியதாக இருக்கிறது.

அதனால் நீதிமன்ற உத்தரவு ஒன்றைத் தவிர 2025 வரை உள்–ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறுவது நிச்சயமற்ற நிலை இருப்பதாகவே கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது எமக்குத் தெரிகிறது.


ஏனெனில் அடுத்தவருடம் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற இருக்கிறது.

அதற்காக ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதமாகும் போது ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றன.

அதனால் உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்ந்து ஒத்திவைக்கப்படும் நிலையே எமக்கு காணக்கூடியதாக இருக்கிறது.

# பண்டிகைக் காலங்களில் இன்புளுவன்ஸா பரவலாம்

## வைத்தியர்கள் எச்சரிக்கை



நாட்டில் புதுவருட பண்டிகை காலங்களில் இன்புளுவன்சா வைரஸ் பரவும் அபாயம் தொடர்பாகப் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு வைத்தியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கர்ப்பிணிப் பெண்கள், நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் கைக்குழந்தைகளுக்கு இந்த இன்புளுவன்சா தொற்று உயிரிழப்பை ஏற்படுத்தும் என்பதால் தேவையான முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இன்புளுவன்சா தொற்றுக்கு வழமை போன்று இருமல், காய்ச்சல், சளி போன்ற அறிகுறிகள் காணப்படுகின்றன என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சன நடமாட்டம் அதிகம் உள்ள பகுதிகளுக்குச் சென்றால், தேவையான சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

காய்ச்சல் அறிகுறி உள்ளவர்கள் பண்டிகைக் காலங்களில் சன நெரிசலான இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

# சூரிய சக்தி சங்கம் போராட்டம் மகஜரும் நேற்றுக் கையளிப்பு















லங்கா சூரிய சக்தி சங்கத்தின் சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்பாட்டமொன்று நேற்று (புதன்கிழமை) இலங்கை மின்சார சபை கல்முனை காரியாலய முன்றிலில் இடம்பெற்றது.

கல்முனை மின் பிராந்தியத்திலுள்ள சூரிய சக்தி மின்சார உற்பத்தியாளர்களாகிய தங்களுக்கு சுழலக வழி சோழர் உற்பத்தியாளர்களின் கொடுப்பனவுகள் நீண்ட கால நிலுவை, புதிய கொள்வனவு விலை மாற் றம் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்தும் இலங்கையில் அதிகமாக சூரியசக்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலைபேறான சக்தி உருவாக்க அபிவிருத்தி திட்டத்தில் பங்குதாரர்களாக இருக்கின்ற தாங்கள் தற்காலத்தில் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளை கவனத்தில் கொள்ளுமாறு போராட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

குறிப்பாக கல்முனை பிராந்தியத்தில் மாத்திரம் சுமார் 136 இற்கும் அதிகமாக இலங்கை மின்சார சபைக்கு இந்த சங்க உறுப்பினர்கள் ஊடாக மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்படுகின்றது .

அதேபோல் ஒவ்வொரு மாதமும் இலங்கை மின்சார சபையிடமி ருந்து 40 மில்லியனுக்கு அதிகமான ரூபாவை ஒதுக்க வேண்டிய தேவையும் உள்ளது.

மேலும் முழு கிழக்கு மாகாணத்துக்கும் ஒவ்வொரு மாதமும் 70 மில்லியனுக்கு மேல் இலங்கை மின்சார சபை செலுத்த வேண்டி இருக்கின்றது.

தற்போது இலங்கை மின்சார சபை தமது கட்டணத்தை உச்சமாக சீரமைத்துள்ள இந்த தருணத்தில் சேவை வழங்குநர்களாகிய இவர்களது பிரச்சினைகளையும் நாட்டில் காணப்படுகின்ற அதிகரித்த பணவீக்கம் மற்றும் பொருட்செலவுகள், பராமரிப்பு செலவுகளையும் கருத்தில் கொண்டு பல்வேறு கோரிக்கைகளை இவர்கள் முன்வைத்தனர்.

ஒன்பது மாதங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள கொடுப்பனவினை மேலும் தாமதம் இன்றி இ.மி.சபை முன்னுரிமைப்படுத்தி வழங்குதல், தற்போதுள்ள அதிகரித்த பணவீக்கம் மற்றும் பராமரிப்பு செலவுகள் காரணமாக இருக்கின்ற மிகப்பெரிய விலையேற்றத்திற்கு சமாந்தரமாக தற்போது வழங்கப்படும் 22 ரூபா கொடுப்பனவை புதிய விலையேற்றத்திற்கு ஏற்றாற்போல் திருத்தம் செய்தல், இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தியுள்ள ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்து பொருத்தமான திருத்தங்களை கொண்டு வருதல், முறைப்படுத்தப்பட்ட கால அட்டவணைக்கு அமைவாக தொடராக கொடுப்பனவை வழங்குதல் போன்ற கோரிக்கைகளை முன்னுரிமைப் படுத்தி உற்பத்தியாளர்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய தரப்புகளுடன் கலந்துரையாடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வேண்டி ஆர்பாட்டத்தின் பின்னர் இலங்கை மின்சார சபை பிராந்திய பிரதம பொறியலாளர் ஏ.எம். ஹைக்களிடம் மகஜரொன்றையும் கையளித்தனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையைச் சொன்ன தெற்கு ஆளுநர்

தென்மாகாண ஆளுநர் வில்லி கமகே அழகான காத்திரமான கருத்து ஒன்றைத் தெரிவித்திருக்கிறார். மாகாண சபைகள் முறைமை நீடிக்க வேண்டுமாயின் அதனை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளிக்கவேண்டும் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாமல் விட்டு 4 வருடங்களுக்கு மேலாகிவிட்டன. மாகாண சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்பதைக் காரணம் காட்டி மைத்திரி – ரணில் கூட்டின் நல்லாட்சி என்று கூறப்பட்ட அரசு தேர்தலை ஒத்தி வைத்தது. அந்தச் சமயத்தில் ராஜபக்சக்களின் செல்வாக்கு மக்கள் மத்தியில் அதீதமாக இருந்தது. பொது ஜன பெரமுன எனப்படும் மொட்டு கட்சியின் அசுர வளர்ச்சியும் பயமுறுத்துவதாக இருந்த காரணத்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் விடுவதற்குச் சட்டச் சீர்திருத்தத்தை ஒரு காரணமாக்கிக் கொண்டது அன்றைய ஆட்சி.

இந்த இக்கட்டிலிருந்து மீண்டு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான வழி வகை உண்டு. ஒரு சிறு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி பழைய முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அனுமதியை நாடாளுமன்றத்தில் பெற்றுவிட்டால், உடனடியாகவே அதனை நடைமுறைப்படுத்த முடியும். அதற்கு வசதியாக இது தொடர்பில் தனிநபர் தீர்மான வரைவு ஒன்றை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஏற்கனவே வழங்கியுள்ளார். அது ஏற்கனவே அரசிதழில் (வர்த்தமானி) வெளியிடப்பட்டும் உள்ளது. தற்போதைய நாடாளுமன்றத்தில்கூட அவர் அதனை மீண்டும் முன்வைத்துள்ளார். ஆனால், அதனை நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

மாகாண சபைகள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வல்ல. அதனைத் தீர்வுக்கான அடிப்படைப் புள்ளியாகக்கூடக் கொள்ளமுடியாது என்று கூறும் கட்சிகளும் தமிழர்களிடையே உண்டு. இருப்பினும் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகள் உள்ளன. 9 மாகாணங்களிலும் மாகாண சபைகள் இப்போதும் நடைமுறையில் உள்ளன. மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் இல்லாமல் ஆளுநரினதும் அதிகாரிகளினதும் நிர்வாகத்தின் கீழ் அவை இயக்கப்படுகின்றன.

எல்லாமாகாணங்களிலும்ஆளுநர்களாகஇருப்பவர்களுக்கும் வில்லி கமகே போன்ற அரசியல் தெளிவு உள்ளவர்கள் அல்லர். அதிலும் குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்கள் தம்மை ஆளுநர்களாக நியமித்திருப்பதே ஆள்வதற்காகத்தான் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதன் வெளிப்பாடாகவே வடக்கு மாகாணத்தில் ஆளுநர் தன் விருப்பப்படி இரு நியதிச் சட்டங்களையும் அரசமைப்புக்கு முரணாக உருவாக்கிக்கொண்டார். கிழக்கு மாகாணத்தில் இருப்பவர் மீது இனவாதத்துடன் செயற்படுகின்றார் என்கிற பலத்த குற்றச்சாட்டும் உண்டு. அப்படிப்பட்ட ஆளுநர்களின் செயற்பாடுகளால் மாகாண சபைகளும் அவற்றின் ஊடான அதிகாரப் பகிர்வும் அர்த்தமற்றவையாகியுள்ளன.

இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். வில்லி கமகே அதனைத்தான் அழகாகச் சொல்லியுள்ளார். "மாகாண சபை முறைமையை இல்லாதொழிப்பதா இல்லையா என்பது ஆட்சியாளர்கள் தீர்மானிக்க வேண்டிய விடயம். ஆனால் மாகாண சபைகள் முறைமை தொடர்ந்தும் இருக்க வேண்டுமாயின் அதனை ஆளுநரின் கீழோ அல்லது அதிகாரிகளின் கீழோ வைத்திருப்பது பொருத்தமானது அல்ல. மாகாண சபைகளை மக்கள் பிரதிநிதிகளிடத்தில் கையளிக்கவேண்டும். அதன் மூலமாகவே, அதன் செயற்பாடுகளை முறையாக முன்னெடுக்க கூடியதாக இருக்கும்" என்று அவர் தெளிவாகக் கூறியுள்ளார்.

ஓர் ஆளுநராக அவர் மிகத் தெளிவானதும் சரியானதுமான விளக்கத்தை வழங்கியிருக்கிறார். மாகாண சபைகள் முறைமையே அந்தந்தப் பகுதி மக்கள் தமக்குரிய கொஞ்சநஞ்ச அதிகாரத்தையாவது பயன்படுத்திக்கொள்வதற்காக உருவாக்கப்பட்டதுதான் என்பதால் அவை மக்கள் பிரதிநிதிகளால் ஆளப்படுவதே சரியானது. எனவே இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு விரைந்து மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான நகர்வுகளை ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவேண்டும்.

# நாணய நிதிய இந்திய கலந்துரையாடல்களில் 90 வீதம் இலங்கைக்கான ஒத்துழைப்புகளே

## வலியுறுத்தப்பட்டன என்கிறார் அலி சப்ரி




சர்வதேச நாணய நிதியத்துடனான இந்திய கலந்துரையாடல்களில் 90 வீதமானவை இலங்கைக்கான ஒத்துழைப்புகளையே வலியுறுத்தி இருந்தன. பொருளாதார நெருக்கடிகளின் மீட்சியின் பெரும் பகுதிக்கு காரணமாக இருந்த டெல்லியின் அவசர உதவிகளை மறந்துவிட இயலாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே வெளிவிவகார அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது:

இலங்கையின் அண்மைய பொருளாதார நெருக்கடிகளின் வழி தெரியாமலும், செய்வதறியாமலும் தவித்திருந்தோம். கடவுளைப் பிரார்த்திப்பதை தவிர மாற்று வழி எமக்கிருக்கவில்லை. பல மணி நேரம் மின் வெட்டு, எரிவாயு, எரிபொருள் என மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். சோதனை மிக்க நாள்களாக அந்தக் காலப் பகுதி எமக்கு அமைந்தது.

நெருக்கடிகளின் உச்சத்தில் இலங்கை இருந்த போது இந்திய உதவிகள் கிடைக்கப்பெற்றன. மீட்சியின் பெரும் பகுதிக்கு காரணமாக இருந்த அந்த உதவிகளையும் ஆதரவையும் எம்மால் மறந்துவிட முடியாது. 3.9 பில்லியன் டொலர் அவசர உதவித் திட்டங்களை இந்தியா இலங்கைக்கு வழங்கியது. இதற்காக விசேடமாக பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கிறோம்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளின் உச்சக் கட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள நியூயோர்க்கில் இடம்பெற்ற ஆரம்பகட்ட பேச்சுவார்த்தைகளின் போது முழுமையாக எதிர்பார்ப்பினை இழந்துவிட்டோம். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவே–வாவுடனான சந்திப்பின் போது நம்பிக்கை தளிர்விட தொடங்கியது.

அதன் பின்னர் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை நியூயோர்க்கில் சந்தித்து கலந்துரையாடினோம். இலங்கைக்கு அவசரமாக உதவ வேண்டும் என்பதை சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிரிஸ்டலினா ஜோர்ஜிவேவாவுடனான சந்திப்பின் போது அமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியிருந்தமை தெரியவந்தது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இந்திய கலந்துரையாடல்களின்போது 90 வீதமான நேரத்தை இலங்கைக்கு உதவி செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தவே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்காக விசேடமாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையின் அடையாளமாக பன்முகத்தன்மை உள்ளது. இந்தியா உட்பட பிராந்தியத்திலும் அதுவே சிறப்பானதாகும்.

ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அடிப்படைவாதத்தை ஏற்றுக்கொள்ளவோ அனுமதிக்கவோ இயலாது. – என்றார்.

# உறுதியான தீர்மானங்களை அறிவித்தால் தேர்தலை ஓரிருமாதத்துக்குள் நடத்தலாம்

## நிமல் புஞ்சிஹேவா கூறுகிறார்



நிதி நெருக்கடியால் நாடாளுமன்ற தேர்தல், ஜனாதிபதி தேர்தல் ஆகியவற்றை நடத்த முடியாது என்ற நிலை தோற்றம் பெற்றால் ஜனநாயகம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

அது தவறான தீர்மானங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக அமையும். நிதி விடுவிப்பு தொடர்பாக அரசாங்கம் உறுதியான தீர்மானத்தை அறிவித்தால் உள்ளூராட்சி மன் றத் தேர்தலை ஓரிரு மாதங்களுக்குள் நடத்த முடியும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தனியார் தொலைக்காட்சி சேவைக்கு வழங்கிய கலந்துரையாடலின்போது மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை விரைவாக நடத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். தவிர்க்க முடியாத காரணிகளால் ஆணைக்குழு எடுத்த தீர்மானங்களைசெயற்படுத்த முடியாத நிலை தோற்றம் பெற்றுள்ளது. தேர்தல் விவகாரம் இழுபறி நிலையில் உள்ளமை கவலைக்குரியது.

நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது. பிரதமருடன் இடம்பெற்ற பேச்சின்போது நிதி விடுவிப்பு தொடர்பில் உறுதியான தீர்மானத்தை அறிவிக் குமாறு வலியுறுத்தியுள்ளோம்.

நிதி தொடர்பில் சாதகமான தீர்மானம் கிடைக்கப் பெற்றால் அதனை அடிப்படையாக கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். ஓரிரு மாதங்களுக்குள் தேர்தலை நடத்த முடியும்.

நிராகரிக்கப்படும் வேட்பு மனுக்களை ஒரு தரப்பினர் உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தும்போது ஆணைக் குழு சார்பில் சட்டமா அதிபர் உயர்நீதிமன்றத்தில் முன்னிலையாவார். ஆனால், தற்போது அவ்வாறான நிலை இல்லை. இதனை பிரதான குறைபாடாகக் கருதுகிறோம்.

பிரதமர் தலைமையில் இடம்பெற்ற பேச்சின்போது இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளோம். சட்டமா அதிபர் முன்னிலையாகாதபோது தனிப்பட்ட சட்டத்தரணியை முன்னிலைப்படுத்த வேண்டும். அது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக உள்ளது.

2023ஆம் ஆண்டுவரவு – செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக ஒதுக்கப் பட்ட 10 பில்லியன் ரூபாவை நிதியமைச்சு விடுவித்தால் எவ்வித முரண்பாடுகளும் தோற்றம் பெறா.

நாட்டின் நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு. கடந்த காலங்களில் எரிபொருள் விலை தொடர்பில் உயர் நீதிமன்றம் விடுத்த உத்தரவு நாடாளுமன்றத்தால் செயற்படுத்தப்படவில்லை. ஆகவே, நீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கும், நாடாளுமன்றத்தின் செயற்பாடுகளுக்கும் இடையில் ஒருசில வரையறைகள் காணப்படுகின்றன.

நிதி நெருக்கடியால் தேர்தலை நடத்த முடியாது என்பது நாட்டில் வழக்கமாகிவிட்டால் ஜனநாயகம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

தேர்தல் தொடர்பில் மக்களின் நம்பிக்கை சிதைவடையும். நிதி இல்லாத காரணத்தால் நாடாளுமன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது என்ற நிலை தோற்றம் பெற்றால் அது தவறானதொரு நிலைக்கு எடுத்துக் காட்டாக அமையும். – என்றார்.

# இலங்கை – இந்திய கப்பல் சேவைக்காக துறைமுக உட்கட்டமைப்பை விரிவாக்கம்

## காங்கேசன்துறையில் கடற்படை தீவிரம்




இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையில் பயணிகள் படகு போக்குவரத்து சேவைக்காக கடற்படையினரின் பங்களிப்புடன் காங்கேசன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து இந்தியாவின் பாண்டிச்சேரி வரை பயணிகள் படகுச் சேவையை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக காங்சேகன்துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை துரிதமாக விரிவுபடுத்தும் வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என கடற்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்குச் சொந்தமான கடல் பிராந்தியத்தின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், கடல் வழியூடாக முன்னெடுக்கப்படும் பொருளாதார நடவடிக்கைகளை பாதுகாப்பான முறையில் முன்னெடுப்பதற்கு நிலையான கடல் வலயத்தை உருவாக்குவதற்கும், அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்கு திறமையாகவும், திறம்படவும் களமிறங்குவதற்கும் கடற்படை தொடர்ந்து உறுதிபூண்டுள்ளது.

அதற்கமைய, துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சால் கடற்படையிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, கடற்படை தளபதி வைஸ் அத்மிரல் பிரியந்த பெரேராவின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கமைய, காங்கேசன் துறை துறைமுகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்தும் வேலைத்திட்டங்கள் கடந்த பெப்ரவரி முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவை மூலம் இடம்பெறும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகளின் குடிவரவு, குடியகல்வு செயற்பாடுகள், சுங்க அனுமதிக்கு தேவையான பயணிகள் முனையத்தை நிர்மாணித்தல் என்பன கடற்படையின் தொழில்நுட்ப பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும். இதற்கு தேவையான மூலப்பொருள்கள் இலங்கை துறைமுக அதிகார சபையால் வழங்கப்பட்டதாக கடற்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடற்படையின் பங்களிப்பின் மூலம் சுற்றுலாத் துறையை மேம்படுத்தவும், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்பு ரீதியான இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்தவும் கடற்படை அதன் முழுமையான பங்களிப்பை வழங்கும் என்று கடற்படை தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.